பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 10 செவ்வாய்க்கிழமை 26.11.2019 கதிர் 21

### இனி இது ரகசியம் அல்ல!

ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் அதிகாரத்துக்கு வந்து விட்டது. ஆனால் ஒரு மாற்றத்துடன்.

அரசியல்வாதியாக முன்னர் செயற்பட்டிராத கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில். ராஜபக்ஷகளில் இப்போது அரசியலில் மூத்தவர் பக்கம் 02 »

# ஐ.நா. தீர்மானத்தை அரசு மீள்பரிசீலனை செய்யும்!



## வெளிவிவகார அமைச்சர் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, நவ. 26

இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்காக அமெரிக்கா மற்றும் இலங்கை இணை அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015 ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை இலங்கை முழுமையாக மதிப்பாய்வு செய்து மறுபரிசீலனை செய்யும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று அறிவித்தார். பக்கம் 03 »

## கிழக்கில் உருவாகின்றது புதிய முஸ்லிம் கூட்டணி!

கொழும்பு, நவ. 26

கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரபலமான முஸ்லிம் அரசியல்வாதிகளைக் கொண்ட அரசியல் கூட்டணியொன்று உருவாகவுள்ளது. பக்கம் 03 »

## தாழ்வுபாடு இளைஞன் கடலில் வீழ்ந்து மரணம்!

மன்னார், நவ. 26

மன்னார் – தாழ்வுபாடு பகுதியில், மீன்பிடிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் நேற்றுக் கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார். தாழ்வுபாடு கிராமத்தைச் சேர்ந்த பக்கம் 03 »

## ரணில் உடன் பதவி விலகாவிடின் மஹிந்தவுடன் சென்றுவிடுவோம் என மிரட்டியது கூட்டமைப்பு



### ஹக்கீம் வெளியிட்ட பரபரப்புத் தகவல்

கொழும்பு, நவ. 26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றத்தை செய்ய வேண்டும். உங்களின் நடவடிக்கையால் நாமும் பலவீனமடைய முடியாது. நாம் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசி எமது பிரச்சினையை பார்த்துக் கொள்கிறோம். என எனக்கு முன்பாகவே ரணிலிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் கூறினார்.

– இப்படி தெரிவித்தார் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம். பக்கம் 03 »

## மட்டக்களப்பில் குளத்தில் மூழ்கி மூன்று இளைஞர்கள் பரிதாபச் சாவு



மட்டக்களப்பு, நவ. 26

மட்டக்களப்பு – ஆரையம்பதி திருநீற்றுக்கேணி குளத்தில் நேற்று நண்பகல் மீன்பிடித்துக் கொண்டிருந்த 3 இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இதில் பக்கம் 03 »

## சி.ஐ.டியினர் வெளிநாடு தப்பிச் செல்வதற்கு தடை

### 704 பேரின் விவரம் விமான நிலையத்துக்கு!

கொழும்பு, நவ.26

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பணியாற்றும் 704 பொலிஸ் உத்தியோகத்தர்களின் விவரம் அடங்கிய பட்டியல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு – குடியகல்வுப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

704 பேரும் பொலிஸ் திணைக் பக்கம் 03 »

## ஐ.தே.க. தலைவர் பதவியிலிருந்து விலகத் தயாராகவுள்ளார் ரணில்!

### பொதுச் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராக உள்ளார் எனக்கட்சியின் பொதுச்செயலாளர் பக்கம் 03 »

## மத்திய வங்கி ஆளுநர் குமாரசாமி டிசெம்பர் 20 இல் பதவி விலகுகிறார்

கொழும்பு, நவ. 26

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, எதிர்வரும் டிசெம்பர் 20ஆம் திகதி தனது பதவிவியிலிருந்து விலகுகிறார் என அறிவித்துள்ளார். பக்கம் 03 »

## தற்றுணிவுடன் ஜனாதிபதி கோட்டா தமிழ் மக்களுக்கு தீர்வு தரவேண்டும்

### சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை




கொழும்பு, நவ. 26

அதிகூடிய பெரும்பான்மை மக்களின் ஆணையை பெற்றுள்ள புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமரும் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பக்கம் 02 »

## நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவேன்!

### மஹிந்த ராஜபக்ஷ உறுதி




கொழும்பு, நவ. 26

இலங்கையில் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பைத் தான் ஏற்கிறார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிதியமைச் பக்கம் 03 »

## மலையக மக்களைக் கேவலப்படுத்தினார் அதாவுல்லா முகத்தில் குடிதண்ணீர் வீசி எறிந்தார் மனோ கணேசன்




கொழும்பு, நவ. 26

தொலைக்காட்சி நேரலை விவாத நிகழ்வில், மலையகத் தமிழர்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட அதாவுல்லாவின் முகத்தில், முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் குடிதண்ணீரை வீசியெறிந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் டக்ளஸ் தேவானந்தா, அதாவுல்லா, மனோ கணேசன் ஆகியோர் பங்கேற்ற விவாத நிகழ்ச்சி இடம்பெற்றது. பக்கம் 03 »

## அதாவுல்லாவுக்கு சுமந்திரன் எதிர்ப்பு



கொழும்பு, நவ. 26

முன்னாள் அமைச்சர் அதாவுல்லா நேற்று முன்தினம் இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் மலையகத் தமிழர்களை இழிவான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்திப் பேசியமை தொடர்பாக கடும் எதிர்ப் பக்கம் 03 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# அரசின் கொள்கைகளை நிறைவேற்ற 6 மாதங்கள் காத்திருக்க வேண்டுமாம்

## இப்படி விளக்கம் கூறுகின்றார் ஜி.எல்.பீரிஸ்

அரசாங்கத்தின் கொள்கைகளை சரியாக நிறைவேற்றுவதற்கு இன்னும் 6 மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளதாக பொதுஜன பெரமுனவின் ஸ்தாபக உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 225 பேரில் தற்பொழுது 104 பேருடைய ஆதரவே தமக்கு உள்ளதாகவும், இந்த ஆதரவை வைத்துக் கொண்டு அரசாங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லையென்பதை சாட்டாகக் கொண்டு, கால இழுத்தடிப்பைச் செய்யவும் தாம் விரும்புவதில்லையெனவும், பொதுத் தேர்தலை நேரத்துடன் நடத்தி, மக்கள் ஆணையைப் பெறவே தாங்கள் விழைகின்றனர் என்வும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தலை நேரத்துடன் நடத்தும் அரசின் திட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் ஒதுழைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# சுகாதார அமைச்சுச் செயலராக மருத்துவர் அநுருத்த பாதெனிய

கொழும்பு, நவ. 26

அரசியல் செயற்பாடுகளில் வெளிப்படையாகச் செயற்பட்டு வந்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அநுருத்த பாதெனிய, சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவர் அநுருத்த பாதெனிய, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் கூட்டங்களில் பங்கேற்றிருந்தமையுடன், கடந்த அரசுக்கு எதிராகப் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தார்.

அவரது இந்தச் செயற்பாடு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழு, முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியிருந்தது. அதனால் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கை வெளியீட்டில் பங்கேற்று தன்னை ஒரு நடுநிலையாளராக வெளிக்காட்ட முற்பட்டு தேர்தல் ஆணைக் குழுவின் எச்சரிக்கைக்கு உள்ளானார்.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான இடைக்கால அரசின் கீழ் சுகாதார அமைச்சின் செயலாளராக மருத்துவர் அநுருத்த பாதெனிய நியமிக்கப்பட்டுள்ளார் என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களின் தலைவர்களை நியமிக்க நால்வர் கொண்ட ஆலோசனைக் குழுவை ஜனாதிபதி நியமித்துள்ள நிலையில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவர் முக்கிய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை விமர்சனங்களை எழுப்பியுள்ளது. (ஜ)

# கிளிநொச்சியில் வெள்ளம்!



கிளிநொச்சி, நவ.26

கிளிநொச்சியில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையினால், தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஆரம்பித்த மழை நேற்றும் தொடர்ச்சியாக பெய்ததால் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

பலத்த மழை காரணமாகச் சில பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. அத்தோடு கிளிநொச்சியில் உள்ள குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் அமைந்துள்ள ஆற்றைக் கடப்பதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி வளாகம் வெள்ளத்தால் மூழ்கியது. உருத்திரபுரம் வீதியில் வெள்ளம் அதிகளவு பாய்கின்றது. இதனால் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

பாடசாலையின் இறுதி ஆண்டுப் பரீட்சைகள் இடம்பெற்று வரும் நிலையில் பாடசாலை மாணவர்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# நிஷாந்த சில்வா தப்பிச் சென்றமை தொடர்பில் விசாரணைக்கு உத்தரவு

பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பாக, விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு பொலிஸ் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

பல்வேறு விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டி சில்வா நேற்றுமுன்தினம் குடும்பத்தினருடன் நாட்டை விட்டு வெளியேறினார். அவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து சுவிற்சர்லாந்து நோக்கி பயணமாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பல்வேறு தரப்பட்ட அரசியர்வாதிகளுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டவர்.

இவர் அனுமதி பெறாமல் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற விடயம் அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையிலேயே விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஜ)

## தற்றுணிவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை தற்றுணிவுடன் மேற்கொள்ளவேண்டும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அரசியல் வரலாற்றில் தேசிய இனப்பிரச்சினை ஏழு தசாப்தங்கள் கடந்தும் புரையோடிப் போயிருக்கின்றது. விடுதலைக்கான கோரிக்கை அஹிம்சைரீதியாக முன்வைக்கப்பட்டபோது அதனை தென்னிலங்கை தலைவர்கள் கருத்திற் கொள்ளாமையின் காரணத்தினால் ஆயுதப்போராட்டமாக உருவெடுத்து 2009 வரையில் நீடித்திருந்தது.

போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகளாகின்றபோதும் தேசிய இனப்பிரச்சினைக்கான மூலகாரணத்தினை உணர்ந்து தீர்வு காணுவதற்கான இதய சுத்தியான நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆட்சி அதிகாரங்கள் இருந்த சந்தர்ப்பத்தில் பெரும்பான்மை மக்கள் தமது ஆணையை பெருவாரியாக வழங்கியிருந்தபோதும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தைப் பூர்த்தி செய்ய முடிந்திருக்கவில்லை. அதே போன்று தற்போது ஜனாதிபதி கோட்டாபயவுக்குப் பெரும்பான்மை மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். ஜனாதிபதி கோட்டாபயவுக்கு வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வாக்களிக்காது விட்டமைக்கு பலத்த காரணங்கள் உள்ளன என்பது பகிரங்கமான விடயமாகும். தமிழ் மக்களின் ஜனநாயகத் தீர்ப்புக்கும் மதிப்பளிக்கவேண்டும்.

ஆகவே தென்னிலங்கை பெரும்பான்மை மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்யும் திராணியுடைய தலைமையைப் பெற்றிருக்கின்ற புதிய ஜனாதிபதி சிங்கள, பௌத்த சித்தாந்தத்திற்குள் கட்டுண்டு நிற்காது தற்றுணிவுடன் இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை வழங்கும் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன் போர் நிறைவுக்கு வந்தகையோடு 12ஆயிரத்திற்கும் அதிகமான போராளிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தி விடுவித்த நிலையில் தற்போது தண்டனைக்காலத்தினையும் தாண்டி சிறைத்தண்டனை அனுபவித்து வரும் 107வரையிலான தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யவேண்டும்.

அதேபோன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள். ஆயிரம் நாட்கள் கடந்தும் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்க முடியாது. அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதையாவது வெளிப்படைத்தன்மையுடன் பொறுப்புக்கூறவேண்டியது அவசியமாகின்றது. இதில் தொடர்ந்தும் தாமதங்களை செய்வது மனிதாபிமானமற்றநடவடிக்கையாகவே அமையும்.

குறிப்பாக, போருக்குப் பின்னர் நடைபெற்ற மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட பின் நான்கு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தெளிவான செய்தியை அரசுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் வழங்கியிருந்தார்கள்.

இருப்பினும் தமிழ்த் தலைவர்கள் எமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை இராஜதந்திர ரீதியாகப் பயன்படுத்துவதற்கு பதிலாக அவற்றைச் சுயலாப கட்சி அரசியலுக்காகவும் சலுகைகளுக்காகவுமே பயன்படுத்தியுள்ளனர். இதன் காரணமாக தமிழ் மக்கள் அடுத்தகட்டம் என்ன செய்வதென்றறியாது தடுமாறும் ஒரு சூழலுக்குள் தள்ளி விடப்பட்டிருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களின் ஆணையைப்பெற்று அவர்களை நிர்க்கதியாக்கிய தமிழ்த்தலைமைகளுக்குரிய பாடத்தினை தமிழ் மக்கள் அடுத்து வரும் காலத்தில் வழங்குவார்கள் என்று எதிர்பார்ப்பதோடு தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை உண்மையாக பிரதிபலிக்கும் மாற்றுத்தலைமையும் விரைவில் உருவெடுக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது-என்றார். (ஜ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறப்படும் மஹிந்த ராஜபக்ஷ இப்போது கோட்டாவுக்குக் கீழ் பிரதமராக.

இந்த 'கெமிஸ்ட்ரி' எப்படி வேலை செய்யப் போகின்றது என்பதுதான் கேள்வி.

கோட்டா - மஹிந்த உறவு நிலை எத்தகையதாக இருக்கப் போகின்றது என்பதுதான் பிரச்சினைக்குரிய விடயம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகார வரம்புகள் எல்லையற்றவை என்பது மஹிந்தவுக்கும் தெரியும்.

அது மாத்திரமல்ல, அந்தக் கதிரையில் தான் கூட்டி வந்து அமர்த்தியிருக்கும் தனது சகோதரர் - தம்பியார் - கோட்டாபயவின் மனநிலைப் போக்கு எத்தகையது என்பதும் மஹிந்தவுக்கும் தெரியும்.

ஒரு வகையில் தாம் குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும் நிலையில்தான் இருக்கின்றோம், குதிரை கட்டுப்பாட்டை விட்டு ஓடி எவ்வளவோ நேரமாயிற்று என்ற யதார்த்தத்தை மஹிந்தர் புரிய ஆரம்பித்து விட்டார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

அதனை விளக்க ஒரு சம்பவம்.

புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 18ஆம் திகதி பொறுப்பேற்றார் அல்லவா? அந்த நிகழ்வுக்கு மஹிந்த ராஜபக்ஷ ஒரு சிறிய பரிசுப் பொதியைக் கொண்டு வந்திருந்தார். கோட்டபாய பதவிப் பிரமாணம் ஏற்றதும், அந்தப் பொதியை தமது மூத்த சகோதரர் சமல் ராஜபக்ஷவிடம் கொடுத்தார் மஹிந்தர். அவர் அந்தக் பொதியைப் பிரித்தார். அதில் மஹிந்தர் குழாம் விசேடமாக கழுத்தில் அணியும் அவர்களின் சிவப்பு நிற (குரக்கன் நிற) சால்வை இருந்தது. அதை எடுத்துக் கொண்டு புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற தமது தம்பியார் கோட்டபாய ராஜபக்ஷவை வாழ்த்தி விட்டு அவர் தோளில் போர்த்தினார் சமல் ராஜபக்ஷ.

ஆனால், அது போர்த்தப்பட்ட அடுத்த ஓரிரு நிமிடங்களிலேயே அதைக் கழற்றித் தமது பக்கத்தில் இருந்த உதவியாளரிடம் கொடுத்து விட்டார் கோட்டா. இதுவரை அதை அவர் அணியவில்லை.

முன்னைய அரசுத் தலைவர்கள் போல அவர் தேசிய உடை அணிவதில்லை. சாதாரண டிரவுஸர், சேட்தான். பெரும்பாலும் கட்டைக் கை சேட். முக்கிய சமயங்களில் மட்டும் கோட்டும் சூட்டும். மற்றம்படி வழமையான டிரவுஸர் சேட்தான்.

இது, கோட்டாவின் பண்பியல்பு எத்தகையது என்பதை உணர்த்தப் போதுமானது என நான் நினைக்கின்றேன்.

குரக்கன் நிற சால்வையைத் தனது பிரத்தியேக அணிகலன் அடையாளமாக பயன்படுத்தத் தொடங்கினார் மஹிந்தர்.

அதனைப் பார்த்து, அதையே பின்பற்றத் தொடங்கினர் சமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ஏன் நாமலின் மற்றத் தம்பிமாரும் கூட.

ஆனால் அந்த பழக்க வழக்கத்துக்குள் கோட்டா என்றுமே சிக்கவில்லை.

மஹிந்தர் சார்பில் பரிசாக அறிவிக்கப்பட்ட குரக்கன் சால்வையையும் கோட்டா புறம்தள்ளி விட்டார்.

*'உங்களை எல்லாம் பின்பற்றும் ஒரே பாணி செயற்பாட்டாளன் அல்லன் நான். எனக்குத் தனித்துவம் உண்டு. எனக்குச் சரி எனப் பட்டதையே செய்வேன். அதனையே பின்பற்றுவேன். நீங்கள் காட்டிய பாணியில்தான் செல்ல வேண்டும் என்று கருதுபவன் - நினைப்பவன் - அல்லன் நான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்'* - என்ற செய்தியை தனது நடத்தைப் பண்பியல்பு மூலம் தன் குடும்பச் சகோதரர்களுக்கும் உறுதியாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார் கோட்டாபய என்றுதான் நான் நினைக்கின்றேன்.

மஹிந்தவிலிருந்து நாமல் வரை அனைத்து ராஜபக்ஷக்களுக்கும் இது இப்போது புரியத் தொடங்கியிருக்கின்றது எனவும் தகவல்.

பதவிக்கதிரையிலேறி இருந்து, ஆட்சிலாகனை கையில் எடுத்துத் தாம் விரும்பிய திசையை நோக்கி அரச நிர்வாகத்தை இயக்க ஆரம்பித்து விட்டார் கோட்டாபய.

இனி, அவரை மறித்துப் பிடித்துத் தமது வழிக்குக் கொண்டு வரலாம் என மஹிந்தர் நினைப்பாராயின் அது பெரும்பாலும் பகல் கனவாகவே அமையும் என நான் நினைக்கின்றேன்.

நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் வாசகர்களே...?

- மின்னல் -

## ஐ.நா. தீர்மானத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்மானத்தைச் சீரானதாகவும், பாகுபாடற்றதாகவும் மாற்றுவதற்காக இலங்கை தேசிய பார்வையில் அதைப் பார்க்கும் என்றும் அவர் கூறினார்.

நேற்றுக் காலை வெளிவிவகார அமைச்சராகக் கடமைகளை ஏற்றுக்கொண்ட அவர், செய்தியாளர்களிடம் பேசும்போது இதனை தெரிவித்தார்.

அவர் மேலுக் கூறுகையில்–

கடந்த அரசால் நிறைவேற்றப்பட்ட அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களையும், குறிப்பாக ஏ.சி.எஸ்.ஏ., சோஃபா, மிலேனியம் சலஞ்ச் கோப்பரேவின் (எம்.சி.சி) ஆகியவற்றை மறுபரிசீலனை செய்யும். தேவைப்பட்டால் திருத்தங்களை அறிமுகப்படுத்தும்.

இலங்கைத் துருப்புக்கள் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதை மறுபரிசீலனைசெய்ய ஐ.நாவுடன் பேச்சு தொடங்குவோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதனது தேர்தல் அறிக்கையில் நடுநிலை கொள்கையின் அடிப்படையில் புதிய அரசின் வெளியுறவுக் கொள்கை அமையுமெனக் குறிப்பிட்டார். அதை இங்கே நினைவுபடுத்துகிறேன்.

2015 க்குப் பிறகு கையெழுத்திடப்பட்ட அனைத்து இருதரப்பு ஒப்பந்தங்களையும் நாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். நமது தேசிய பாதுகாப்பு, இறையாண்மை, நமது மக்களின் நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு வரி, பிரிவு அல்லது பத்தியையும் அகற்றவேண்டும். நமது பொருளாதாரம், வர்த்தகத்தை இவை எதிர்மறையாக பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை ஒரு மிகப்பெரிய அரசியல் மாற்றத்தைக் கண்டது. இதன் மூலம் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஒரு புதிய வளர்ச்சி பாதையில் மீட்டெடுத்துள்ளது. புதிய அரசின் முக்கிய பணி தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவது மற்றும் இழந்த நம்பிக்கையை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மீண்டும் உருவாக்குவது.

அனைத்து இலங்கையர்கள், சமூகங்களிடையே வளர்ச்சி மற்றும் அமைதியே அரசின் இலக்கு என்பதால் புதிய அரசு வளர்ச்சி மற்றும் நல்லிணக்கச் செயல்பாட்டில் பங்கேற்க தமிழ் புலம்பெயர்ந்தோர் உள்ளிட்ட இலங்கை வெளிநாட்டினரை அழைக்கும். அந்த இலக்கை அடைய, எங்களுக்கு அனைத்து நாடுகளின் நட்பும் ஒத்துழைப்பும் தேவை. அதனால் தான் இலங்கை எந்தவொரு அதிகாரக் குழுவையும் சார்ந்திருக்காது – என்றார். (ஐ)

## தாழ்வுப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.பெப்சிகர் பீரிஸ் (வயது–23) என்ற இளைஞன் சக மீனவருடன் நேற்றுக் காலை தாழ்வுபாடு கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ளார்.

படகை ஓட்டிச் சென்ற இளைஞன் படகில் இருந்து திடீரென கடலில் வீழ்ந்துள்ளார். உடனடியாகச் சக மீனவர் காப்பாற்ற முயற்சி செய்தமையோடு, ஏனைய மீனவர்களுக்கும் தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து, மீனவர்கள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, அந்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞனின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மன்னார் வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சார்ந்த இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள் இருவர் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த அரசியல் கூட்டணி தனித்து போட்டியிடவுள்ளது.

இந்தக் கூட்டணி நாடளாவிய ரீதியில் போட்டியிடவும் ஆலோசனை நடத்தி வருகிறது எனத் தெரியவருகிறது. (ஐ)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரையம்பதி முதலாம் பிரிவு திருநீற்றுகேணி பிரதேசத்தைச் சேர்ந்த, திருமணம் முடித்து 4 மாதங்களேயான சுரேஷ்குமார் தர்ன் (20 வயது), ஆரையம்பதி 2 ஆம் பிரிவு செல்வநகரைச் சேர்ந்த நகுலேந்திரன் திவாகரன் (19 வயது), செல்வன் சதுர்ன் (19 வயது) ஆகிய மூவருமே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தக் குளம் அண்மையில் தோண்டப்பட்டிருந்த நிலையில் நேற்று பகல் 12 மணியளவில் 5 பேர் கொண்ட நண்பர்கள் குழு மீன்பிடியில் ஈடுபட்டுக் குளித்துள்ளனர்.

இந்தநிலையில் குளத்தின் நடுப்பகுதியில் சகதியில் சிக்குண்டு அவர்கள் நீரில் மூழ்கினர். அவர்களில் இருவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஏனைய மூவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதனையடுத்து கொட்டும் மழையில் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் உடனடியாகச் செயற்பட்டு குளத்தின் நீர்வெளியேறும் துருசுப் பகுதியை மண் அகழும் இயந்திரம் கொண்டு உடைத்து நீரை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொண்டு, நீரில் மூழ்கிக் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கத் தேடுதலில் ஈடுபட்டனர்.

சுமார் 3 மணிநேர தேடுதலின் பின்னர் நீரில் மூழ்கிய உயிரிழந்த 3 சடலங்களை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சி.ஐ.டியினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களத்தின் அனுமதி பெறாது வெளிநாட்டுப் பயணங்களை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டாம் எனப் பொலிஸ் தலைமையகத்தால் குடிவரவு, குடியகல்வுப் பிரிவிடம் கோரப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை, 11 இளைஞர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட நாட்டின் முக்கிய குற்றவியல் வழக்குகளின் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த டி சில்வா, தனது குடும்பத்துடன் சுவிற்ஸர்லாந்துக்கு நேற்று முன்தினம் பயணமாகினார்.

பொலிஸ் திணைக்களத்தின் அனுமதி பெறாது வெளிநாடு பயணித்த அவர், தனது பாதுகாப்பு நலன் கருதி சுவிற்ஸர்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இந்த நிலையிலேயே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பணியாற்றும் 704 பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர் விவரம் அடங்கிய பட்டியல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு குடியகல்வு பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மத்திய வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலைக் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ளது.

பிணைமுறி மோசடி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட அர்ஜுன் மகேந்திரன் பதவி நீக்கப்பட்ட நிலையில் 2016ஆம் ஆண்டு ஜூலையில் மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசாமி நியமிக்கப்பட்டார்.

2017ஆம் ஆண்டில் தெற்காசியாவின் சிறந்த மத்திய வங்கியின் ஆளுநர் என்ற கௌரவத்தை கலாநிதி இந்திரஜித் குமாரசாமிக்கு குளோபல் கப்பிடல் மார்க்கெட் சஞ்சிகை அறிவித்திருந்தது.

அத்துடன், கலாநிதி இந்திரஜித் குமாரசாமி, தாய்நாட்டுக்காக வழங்கிய மிகச் சிறந்த மற்றும் விலைமதிப்பற்ற சேவைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த ஓகஸ்ட் மாதம் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் நிந்தவூரில் நடந்த கூட்டத்தில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் ஒலுவிலில் மக்களைச் சந்தித்தபோது, சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் எனக்கு சொன்ன விடயம், 'சேர்.. இனிமேல் ரணிலோடு வந்துவிடாதீர்கள்' என்பதுதான். அது அந்த மனிதனுக்கு விளங்கவில்லை. இப்படியான விடயம் இருப்பதாக அங்குள்ள அந்த மனிதனுக்கு விளங்குமோ என்னவோ தெரியவில்லை.

ஐ.தே.க. தலைவர் முன்னிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியமான ஒரு எம்.பி. சொன்னார், 'ஐ.தே.கவை நீங்கள் பலவீனப்படுத்த அனுமதிக்க முடியாது. கட்சியைப் பலவீனப்படுத்துவதென்பது நீங்கள் எங்களைப் பலவீனப்படுத்தும் விடயம். நீங்கள் கட்சிக்குள் மாற்றம் செய்யாவிட்டால், நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசி ஏதாவது செய்து கொள்கிறோம். – என்றார்.

விரக்தியின் விளிம்பிற்கு மிகப் பெரிய சிறுபான்மை இயக்கம் ஒன்று வருவது ஆபத்தானது. அடுத்த தேர்தலில் பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றால், சிறுபான்மையினரின் காப்பீடுகளை இழந்து விடுவோம்.

தான் தனக்கு தந்த பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றினேன், வடக்கு –கிழக்கில் விழுந்த வாக்குகள் அனைத்தும் தன்னால் தான் விழுந்ததென முன்னாள் பிரதமர் கூறுகிறார். இது கேலிக்கூத்தானது. காகம் வந்து குந்த பனம்பழம் விழுந்த கதையிது. நமக்கு ஏன் பிரச்சினையென நாமும் பேசாமல் பார்த்துக்கொண்டிருக்கிறோம்–என்றார். (ஐ)

## ஐ.தே.க தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் ஊடகவியலாளர்கள் சந்தித்தபோது கட்சியின் பொதுச் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையானவர்களின் கருத்துக்களைப் பரிசீலிப்பேன் என்றும் அதன்படி கட்சியின் பதவி நிலைகளில் இருந்து எதிர்காலத்தில் விலகுவேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் என அகிலவிராஜ் காரியவசம் கூறினார். (ஐ)

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது மலையக தோட்டத்தொழிலாளர்களை இழிவுபடுத்தும் வகையில் அதாவுல்லா கருத்து வெளியிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த மனோ கணேசன், அதாவுல்லாவின் முகத்தில் குடிதண்ணீரை வீசினார். இதையடுத்து இருவரும் கடுமையாக வார்த்தைகளால் மோதிக் கொண்ட நிலையில், தொலைக்காட்சி அந்த நிகழ்ச்சியை அவசரமாக முடித்துக் கொண்டது.

இது தொடர்பில் மனோகணேசன் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

முன்னாள் அமைச்சர் அதாவுல்லா, தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு வந்ததில் இருந்தே நிதானம் இல்லாமலே நடந்துக்கொண்டார். நிகழ்ச்சியில் அவரது நடத்தையை முதலில் இருந்தே பார்ப்பவர்களுக்கு இது புரிகிறது.

சக கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல்வாதிகளையும் கூட அவர் அவன் – இவன் என்ற ஏக வசனத்தில்தான் பேசினார். தோட்ட தொழிலாளர் பற்றியும், முதலிலேயே சில இடங்களில், அவன் –இவன் என்று குறிப்பிட்டபடி வந்தார். பொறுமையாக இருந்தேன்.

நிகழ்ச்சியில் பல நல்ல கருத்துகளையும் அவர் சொன்னார். பல இடங்களில் நடுநிலை தவறி, எல்லாவற்றுக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள்தான் காரணம் என்றும் கூறினார். ஆயுதம் தூக்கும்வரை தமிழ் இளைஞர் சென்றதன் பின்னணியில், பேரினவாதம் இருந்திருக்கின்றது என அவருக்கு புரிய வைக்க பல இடங்களில் நான் முயன்றேன்.

கடைசியில், அந்த இழிச் சொல்லை பயன்படுத்தி தோட்ட தொழிலாளர்களை விளித்தார். அந்த சொல் பிழையானது. அதை வாபஸ் வாங்குங்கள் என்று எழுந்து நின்று நான் அவருக்கு திரும்ப, திரும்பச் சொன்னேன். அவர் வாபஸ் வாங்க மறுத்து பேசிக்கொண்டு போனார். அப்போதுதான் அந்த சம்பவம் நிகழ்ந்தது.

மனோகணேசன் குவளையில் இருந்த தண்ணீரை அதாவுல்லா முகத்தை நோக்கி வீசியது நிதானம் தவறிய தவறு எனச் சிலர் இப்போது கூறப்பார்க்கின்றார்கள்.

முதலில் ஒன்றை கூறுகின்றேன். நான் நிதானம் தவறவில்லை. நினைவுபூர்வமாகவே நான் குடித்து எஞ்சி இருந்த தண்ணீரை அவர் முகத்தில் வீசினேன். நிதானம் தவறி இருந்தால், நாற்காலியை அல்லவா தூக்கி வீசி இருப்பேன்?

மேலும் இப்படி முட்டாள் கருத்தாளர்களின் முகங்களை நோக்கி தண்ணீரை வீசி எறிவது உலகம் முழுக்க நிகழ்ந்துள்ளது. வரலாற்று பக்கங்களை புரட்டி தேடுங்கள். ஏனெனில் சிலருக்கு சில பாஷைகள் தான் புரியும் என உலகம் எனக்குச் சொல்லி தந்திருக்கின்றது.

இன்னொரு புறம், தமிழ் அகராதியை எடுத்து, அந்த இழிச் சொல்லுக்கு விளக்கம் கூறி, அது இழிச்சொல் அல்ல என நிறுவ முனைவது, அப்புறம் அவர் மனோவை பாராட்டினார், மலையக மக்களை பற்றி நல்லபடியா தான் பேசினார், அவர் உள்ளத்தில் இருந்து பேசவில்லை, தொண்டையில் இருந்தே பேசினார் என்றெல்லாம் கூறவேண்டாம்.

துஷ்ட கருத்துகளை கூறும் துஷ்டனை கண்டால், நான் தூர விலகி போக மாட்டேன். என் கோபத்தை காட்டுவேன். அது நிதானமான கோபம். இந்த கோபம், எனது நிழலைப்போல் என்னுடன் எப்போதும் வாழ்கிறது.

ஒருவேளை நான் கோபப்படாமல், இந்த சொல்லை கேட்டும், சாந்தமாக பதில் கூறி வந்திருந்தால், யோசித்து பாருங்கள், இன்று உலகம் என் மீது கோபப்பட்டிருக்கும். என் வீடு என் மீது உமிழ்ந்திருக்கும். என் நிழல் என்னை கேவலமாக கணித்திருக்கும்.

ஒன்றை மிகத்தெளிவாக கூறிவைத்திட விரும்புகிறேன். எந்தவொரு இனத்தையும், சமூகத்தையும் விளிக்க, அந்த இனம், சமூகம், 'இழிச்சொல் என கருதும், சொல்லை எவரும் பயன்படுத்த முடியாது. அதேபோல் மலைநாட்டில் உழைக்கும் பாட்டாளிகள் குறித்து, அந்த இழிசொல்லை இனி எவரும் பயன்படுத்த முடியாது. கூடாது.

பயன்படுத்தினால், இந்த மனோ கணேசன் மட்டுமல்ல, இலட்சக்கணக்கான இன்றைய மலையக இளையோர் அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் பொங்கி எழுவார்கள். இது இந்த அதாவுல்லாவுக்கு மட்டுமல்ல, இவரை போன்ற அனைவருக்கும் நான் தரும் செய்தி என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## அதாவுல்லாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக் கிளம்பியுள்ளது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மலையக மக்களிடமும் அனைத்து தமிழ் மக்களிடமும் அதாவுல்லா மன்னிப்பு கேட்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

தமது டுவிட்டர் தளத்தில் இது தொடர்பில் அவர் இட்டுள்ள பதிவில், அதாவுல்லா மலையக மக்களிடமும் அனைத்து தமிழ் மக்களிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும். எமது சொந்தங்களைக் கேவலமாக விளிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் – எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சராக நேற்று அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட அவர், அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் பொருளாதாரம், அரச – தனியார் துறை என அனைத்தும் வீழ்ச்சியடைந்துள்ளன.

இதனால், மக்கள் நாட்டின் பொருளாதாரத்தின் மீது நம்பிக்கை அற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயங்குகிறார்கள். வியாபாரங்கள் அனைத்தும் வீழ்ச்சியடைந்துள்ளன.

வங்கிக் கடன் அதிகரித்துள்ளது. இதனால் இலங்கை இன்று வீழ்ச்சியடைந்துள்ளது. இதிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவேண்டும். நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவில் கைது செய்யப்படலாம் என அரச அதிகாரிகள் அச்சத்துடன்தான் இதுவரை காலமும் இருந்து வந்தார்கள்.

நாம் எதிர்காலத்தில் அரச அதிகாரிகளின் இந்த அச்சத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம் என்பதை இவ்வேளையில் கூறிக் கொள்கிறோம் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## வகுத்தான் வழியில் ஐ.தே.க...!

நடந்து முடிந்த ஜனாதிதித் தேர்தல் பல விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றமையைக் கண்கூடாகக் கண்டோம்.

மற்றொரு தடவை தமிழர்கள் ஒன்றுபட்ட தேசமாக தம்மை எழுச்சிப்படுத்திக் காட்டியிருக்கின்றார்கள்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக் காட்டியபடி பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் துருவ மயப்பட்டு வெவ்வேறு தரப்புகளாகத் தங்களுக்குள் ஐக்கியப்பட்டு ஜனநாயகச் செய்தி ஒன்றை சர்வதேசத்துக்கும் விடுத்திருக்கின்றார்கள் என்றே கொள்ளவேண்டும்.

ஒரு புறம் தென்னிலங்கையில் பௌத்த, சிங்கள பேரினவாதிகள் ஐக்கியப்பட்டு, தனித்து நின்றும் இத்தகைய தேர்தல்களில் வெல்ல முடியும் என்ற ஆபத்து நிலைமை வெளிப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சிறுபான்மையினரின் தயவு இன்றியே, பெரும்பான்மையினர் இனவாதத்தைக் கிளப்பி, அதிகாரத்தைப் பிடிக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டிருப்பது மிக ஆபத்தான நிலைமையாகும்.

ஐம்பதுகளின் நடுப்பகுதியில், 24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வருவேன் என்ற பண்டாரநாயக்காவின் போக்கோடு பிள்ளையார் சுழி போட்டு ஆட்சியைப் பிடித்த பேரினவாதம், இப்போது மீண்டும் ஒரு தடவை ராஜபக்ஷக்களினால் அதே மாதிரி உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இது ஓர் ஆபத்தான – மோசமான – முன்னுதாரணம்.

இலங்கைத் தீவில் பேரினவாதம் பேசாமல் – இனவாத சகதிக்குள் வீழாமல் – நடுநிலையோடும் மிதவாதத்துடனும் மத, மொழி, இன சமரசத்துடனும் விடயங்களை அணுகுவோருக்கு இனி அரசியலில் இடமில்லை என்ற மோசமான முன்னுதாரணத்தை இந்தத் தேர்தல் தந்து நிற்கின்றது.

இலங்கையில் – குறிப்பாகத் தென்னிலங்கையில் ஆட்சி அதிகாரத்துக்கும் பதவிக்கும் வருவதானால் மத, மொழி, இனவாதத்தைப் பின்பற்றி நிற்பதே ஒரே வழி என்ற மிக மோசமான வழிகாட்டலை இந்தத் தேர்தல் முடிவு காட்டுகின்றது.

அந்த வேறுபாட்டை நாம் உடனடியாக உணரக் கூடியதாக இருக்கின்றது. தேர்தல் முடிவுகள் வெளியாகி ஒரு சில நாள்களில் அந்தப் பிரதிபலிப்பை நாம் தரிசிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

இதுவரை காலமும் – குறிப்பாக 2002க்குப் பிறகு கடந்த ஜனாதிபதித் தேர்தல் வரை – தம்மை நடுநிலை மற்றும் மிதவாதியாகக் காட்டி வந்தவர் ஐ.தே.கட்சித் தலைவரும், பிரதமராக இருந்தவருமான ரணில் விக்கிரமசிங்க.

இந்த ஜனாதிபதித் தேர்தல் தோல்வியை அடுத்து அதற்கான காரணங்களை வெளிப்படுத்திய ரணில் விக்கிரமசிங்க அதில் ஒரு விடயத்தைத் தொட்டுக் காட்டுகின்றார்.

"கட்சிக்கு சிங்கள, பௌத்த அடிப்படை இல்லாமல் போனமை துரதிஷ்டமானது. அதனைப் பெறுவது குறித்து மீளக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது குறித்துத் தெளிவடைந்த பின்னரே கட்சியால் முன்னோக்கிச் செல்ல முடியும்" – என்று அவர் வெளிப்படையாகப் பேசத் தொடங்கி விட்டார்.

"இந்த வேலைத் திட்டத்துக்கு மகா சங்கத்தினரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு, புதிய ஐக்கிய தேசியக் கட்சியாக எமது அமைப்பை முன்னோக்கிக் கொண்டு செல்வோம்." – என்று உரைத்திருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

இந்த உரையில் இரண்டு விடயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

ஒன்று – சிங்கள, பௌத்த அடிப்படையை முன்னிறுத்தி பிரசாரத்தை முன்னெடுத்த ராஜபக்ஷக்களுக்குப் பெரு வெற்றி கிடைத்திருக்கின்றது. இனவாதம் பேசாமல், சிறுபான்மை இனங்கள் மற்றும் மதங்களை அரவணைத்துச் செல்ல முன்னெடுக்கப்பட்ட முயற்சி பெரும்பான்மையின மக்களினால் அடியோடு நிராகரிக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டுள்ளது.

அடுத்தது – கட்சியை மீண்டும் தூக்கி நிறுத்தவதானால், அதற்கு சிங்கள, பௌத்த அடிப்படையை முழுமையாக வழங்க வேண்டும். அதாவது, பேரினவாதப் பண்பியலைக் கட்சி மீண்டும் முழுமையாக வரித்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய தேர்தல் தோல்வி, தென்னிங்கையின் காலாதி காலப் பழக்கப்படி – பரவணியான பண்பியல்புகளின் பிரகாரம் – ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் பேரினவாத சகதியை நோக்கியே சுண்டி இழுக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய தரப்பிலும் பார்க்கத் தங்களைத் தீவீரமான பேரினவாதியாகக் காட்டினால்தான் தென்னிலங்கை வாக்கு வங்கியை இலகுவாகச் சுவீகரித்து விடலாம் என்ற பாடத்தையே இந்தத் தேர்தல் மூலம் தாங்கள் கற்றுக் கொண்டிஐக்கின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கருதும் நிலைமையே இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

ஒருவகையில் அது, தவறு என மறுக்கப்பட முடியாத யாதார்த்தமும் கூட. அதுதான் களப்புறச் சூழ்நிலை.

ஜனநாயக அரசியலில் வெற்றி பெறுவதுதான் இலக்கு. அதற்கு வாய்ப்பான தந்திரங்களைக் கையாள்வதுதான் சிறந்த உத்தி.

பேரினவாதத் தந்திரோபாய உத்தியே பெருந்தோல்விகளில் இருந்தும் மீள்வதற்கு வாய்ப்பான – உசிதமான – வழிமுறை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால், பொதுஜன பெரமுன வழியில் அத்திசையை நோக்கி, ஐ.தே.கட்சியும் பயணிப்பது தவிர்க்கவே முடியாத கட்டாயமாக அமையும்.

அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து ரணில் நீக்கப்படுகின்றமை அந்த உருமாற்றத்துக்கு இலகுவாக – இயல்பாக – விரைவாக – வழி செய்யும். அவ்வளவுதான்...!

# எதிர்க்கட்சித் தலைவராவதற்கு உரிய தகுதி சஜித்திடம் இல்லை

## கூறுகின்றார் ராஜித சேனாரத்ன



கொழும்பு, நவ. 26

சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பதற்கான தகுதியை இன்னும் அடையவில்லை என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சிக்குள் நிலவிய முரண்பாடு தோல்விக்குக் காரணமாக அமைந்தது. ஊழல்மோசடிகளை விசாரணை செய்ய அமைக்கப்பட்ட நிறுவனங்கள் மேலும் அதிகமான ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கின. ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளில் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதிக சிரத்தையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டார். ஆகவே அவருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எந்தவித உண்மையும் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவருக்கான தகுதி வெறுமனே பிரபல்யமடைந்திருப்பது மாத்திரம் அல்ல. மாறாகச் சாணக்கியமாகச் செயற்படுவது முக்கியமானது . அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் சர்வதேசத்துடன் நெருங்கிச் செயற்படக்கூடிய ஒருவராக இருக்கவேண்டியது கட்டாயம். ஆனால் சஜித் பிரேமதாஸ என்பவர் குறைந்தளவு அரசியல் அனுபவத்தை கொண்டவர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டால் அவரின் இடத்தை நிரப்புவதற்குத் தகுதியான தலைவர் ஒருவரை நான் கட்சிக்குள் அடையாளம் காணவில்லை. சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்த விடயத்தில் மற்றையவர்கள் அவசரப்பட்டு விட்டனர் – என்றார். (ஐ)

# இராமநாதன் வீதியில் தேங்கியுள்ள குப்பை!

## டெங்கு நுளம்பு பெரும் ஆபத்து





யாழ்ப்பானம், நவ. 26

யாழ்ப்பாண் சேர்.பொன் இராமநாதன் வீதியில் தேங்கிக் கிடக்கும் குப்பையால் அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ள அப்பகுதி மக்களும், பல்கலைக்கழக மாணவர்களும் டெங்கு நுளம்பு பரவும் அபாயமும் அங்கு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாக உள்ள அந்தப் பகுதியில் மிக நீண்ட நாள்களாகக் குப்பை தேங்கிக் காணப்படுகின்றது.

பல்கலைக்கழகச் சூழல் யாழ்.மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் வருவதால் அங்கு தேங்கும் குப்பைகள் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை. அங்கு தேங்கும் குப்பைகளை அகற்றுமாறு கோரிக்கை முன்வைக்கப்படும்போது, இந்த இரு சபையினரும் தமது எல்லை தொடர்பில் குறிப்பிட்டு குப்பைகளை அகற்றுவதில் தாமதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பகுதியில் குப்பைகளைக் கொட்ட வேண்டாம் என்று நல்லூராப் பிரதேச சபையினால் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ளபோதும், பொது மக்கள் இரவு நேரங்களில் பெறுப்பற்ற வகையில் அங்கு குப்பைகளைக் கொட்டுகின்றார்கள் என்று பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் உடனடியாக கவனத்தில் எடுத்து, அங்கு தேங்கி கிடக்கும் குப்பைகளை அகற்றி அங்கு ஏற்பட்டுள்ள சுகாதாரச் சீர்கோட்டை முடிவுக்கு கொண்டுவருமாறும் மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ஐ – 07)

# நோர்வூட் தீவிபத்தில் கடைகளுக்கு சேதம்!



ஹற்றன், நவ. 26

நோர்வூட் நகரத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு கடைகள் முற்றாக எரிந்தன . ஹற்றன் நகர சபை தீயணைப்பு வாகனங்கள் தீப்பரவலைக் கட்டுப்படுத்தியமையால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பே இதற்கான காரணமென ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிகிறது. (ஐ)




**நாளை**

27.11.2019
புதன்கிழமை

நட்சத்திரம்: பிரதமை மு.இ. 08.32 வரை
திதி : அனுசம் மு.ப. 09.51 வரை
இராகுகாலம் : 12.12 – 01.42
சுப நேரம் : 04.42 – 06.12

## ஓ.எல். சிறப்பு வகுப்புகள் கருத்தரங்குகளுக்கு தடை

கொழும்பு, நவ. 26

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் - தனியார் வகுப்புகள், மீட்டல் பயிற்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளைம் நாளை புதன்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிமுறையை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித அறிவித்துள்ளார்.

இது தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்கள் பொலிஸாருக்கோ அல்லது 1911 எனும் பரீட்சைகள் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பை ஏற்படுத்தி அறிவிக்கமுடியும்.

க.பொ.த. சாதாரண தரபரீட்சை எதிர்வரும் இரண்டாம் திகதி நாடாளவிய ரீதியில் நான்காயிரத்து 987 பரீட்சை மத்திய நிலையங்களில் ஆரம்பமாகிறது. இம்முறை ஏழு இலட்சத்து 17 ஆயிரத்து 8 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இந்த பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி நிறைவடையவுள்ளது. (ஐ)

## பாதுகாப்பு அமைச்சு: சிக்கலில் கோட்டாபய

**கொழும்பு, நவ. 26**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்கத் தீர்மானித்திருந்த நிலையில் அரசமைப்பின் தடை காரணமாக அதை இறுதி நேரத்தில் தவிர்த்து விட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**



இதன் காரணமாகவே ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் பதவி வகிக்க அரசமைப்பில் இடமுண்டா என, உயர் நீதிமன்றத்தில் ஆலோசனை கேட்கத் தயாராகி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பதவியேற்ற இடைக்கால அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக யாரும் பதவியேற்காத நிலையில், கோட்டாபயவின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில், பாதுகாப்பு மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் இணைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது நீக்கப்பட்டது.

19ஆவது திருத்தம், ஜனாதிபதி அமைச்சுப் பதவியை வகிப்பதைத் தடை செய்கின்றது. இதன் காரணமாக ஜனாதிபதி நீதிமன்றத்தின் ஆலோசனைகளைப் பெறுவதற்குத் தயாராகி வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## ஷானி அபேசேகரவை கைது செய்யவேண்டும்

### மேஜர் அஜித் பிரசன்ன கோரிக்கை



கொழும்பு, நவ. 26

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவைக் கைது செய்யவேண்டும் என தாய் நாட்டுக்கான இராணுவ அமைப்பின் இணைப்பாளர் மேஜர் அஜித் பிரசன்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்வேறுப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள ஷானி அபேசேகர, நாட்டிலிருந்து தப்பிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றப்புல னாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் விசாரணைகளை மேற்கொண்ட பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்ரர் நிஷாந்த டி சில்வா நேற்று முன்தினம் தனது குடும்பத்தாருடன் இரகசியமாக சுவிற்சர்லாந்துக்குத் தப்பிச் சென்றுள்ளார். அவர் ஷானி அபேசேகரவின் ஆலோனைக்கமைய சர்சைக்குரிய பல சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தார்.

அத்துடன் அவர்களுக்கு எதிராக பல்வேறுப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள தருணத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்ரர் நிஷாந்த டி சில்வா இரகசியமாக நாட்டிலிருந்து வெளியேறி யுள்ளார். (ஐ)

## முல்லைத்தீவில் கடும் மழை





முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெய்து வரும் கனமழை காரணமாக பொதுமக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக வீதிகள், கடைகள், பாடசாலைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள், வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கன மழை பெய்தது. (ஐ)

## மின் தடை

யாழ்ப்பாணம், நவ.27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**கிளிநொச்சி பிரதேசத்தில்-**

ஒட்டுசுட்டானிலிருந்து மன்னன்கண்டல் வரை, ஒட்டுசுட்டானிலிருந்து முத்தையன்கட்டு வரை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

உளுக்குளம், மறக்கறம்பளை கணேசபுரம் பிரதேசம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

பொயபண்டிவிரிச்சான், சின்னப்பணடி விரிச்சான், மடு பிரதேசத்தின் ஒரு பகுதி, மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## படங்களை நீக்குமாறு படைத் தளபதி பணிப்பு

கொழும்பு, நவ. 26

அனைத்து இராணுவ அலுவலகங்களிலும் வேறு எந்த உருவப்படங்களுக்குப் பதிலாக, அரச இலச்சினைகள் அல்லது இராணுவ இலச்சினைகள் உள்ள படங்களை மட்டும் காட்சிக்கு வைக்குமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய பிறப்பித்த உத்தரவுக்கு அமைவாகவே இராணுவத் தளபதி நாட்டில் உள்ள அனைத்து இராணுவ அலுவலகங்களுக்கும் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ஐ)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
குடும்பத்தில் சமத்துவம் சமாதானம் பேணி சமுதாயத்தில்
பெண்களிற்கெதிரான வன்முறைகளை ஒழித்திடுவோம்
JSAC
16
2019

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்: அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# ஏரிக்கரைகளில் திடீரென உடைப்பு பெங்களூரு ஊருக்குள் வெள்ளம்



பெங்களூருவின் ஹூலிமாவு ஏரிக்கரைகளில் திடீரென உடைப்பு ஏற்பட்டதால் ஊருக்குள் வெள்ளம் பாய்ந்தது.

இதனால் தாழ்வான பகுதியில் உள்ள ஏராளமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

மாநகராட்சி அதிகாரிகளும் தீயணைப்புத் துறையினரும் வீடுகளில் புகுந்த வெள்ளத்தில் சிக்கியவர்களை படகுகள் மூலமாக மீட்டு தற்காலிக முகாம்களிலும் இரவு பாதுகாப்பு விடுதிகளிலும் தங்க வைத்தனர்.

இதனால் உயிர்ச்சேதம் ஏதுமில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பொதுப்பணித்துறையினர் அங்கு வந்து உடைப்பை சரி செய்து வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தினர்.

வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து நேற்று விடிந்த பிறகு சுகாதாரத்துறை மற்றும் வருவாய்த்துறையினர் ஆய்வு செய்ய இருந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 32 விரல்களுடன் குமுறும் ஒடிசா மூதாட்டி



ஒரு சிலர் பிறவியிலேயே கைகளில் கூடுதல் விரல்களுடன் பிறப்பார்கள். சிலருக்கு ஒரு கையில் ஆறாவது விரல் இருக்கும். இன்னும் சிலருக்கோ இரு கைகளிலும் ஆறு விரல் இருக்கும்.

ஒடிசா மாநிலத்தில் கஞ்சாம் என்ற மாவட்டத்தில் வசிப்பவர் நாயக் குமாரி. தற்போது 63 வயதாகும் இவருக்கு பிறவியிலேயே 12 கை விரல்கள், இரு கால்களிலும் தலா 10 என 20 விரல்கள் அமைந்துள்ளன.

ஆனால் பிறக்கும்போதே இந்த உடலமைப்புடன் பிறந்த நாயக் குமாரியை, அவ்வூர் மக்கள் சூனியக்காரி என்று முத்திரையிட்டு தங்களுடன் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி வைத்துள்ளனர். இதனால் அவர் பிறந்தது முதல் பிறருடன் சகஜமாக பழக முடியாமல் வேதனை அடைந்துள்ளர்.

தன் வேதனை நிறைந்த வாழ்க்கை குறித்து பகிர்ந்து கொண்டுள்ள நாயக் குமாரி, தன்னுடைய கை மற்றும் கால் களில் உள்ள கூடுதல் விரல் கள் பிறவி குறைபாடு, ஆனால் எங்கள் ஊரில் வசிக்கும் மூடநம்பிக்கை நிறைந்த மக்கள் இதை சற்றும் யோசிக்க மறுக்கிறார்கள் என்றார்.

என்னிடம் உள்ள இந்த குறையைச் சரி செய்ய எனக்கு போதிய பொருளாதார வசதி இல்லை. என்னைச் சுற்றி வசிப்பவர்கள் என்னை ஒரு சூனியக்காரி என்றே நம்பு கிறார்கள். ஆகவே என்னை ஒதுக்கி வைக்கிறார்கள்.

ஊர் மக்கள் என்னைச் சூனியக்காரி என்று ஒதுக்கி வைப்பது மிகுந்த வேதனையாக இருக்கிறது என்று நாயக் குமாரி தெரிவித்துள்ளார். மேலும் மக்கள் என்னை வித்தியாசமாக பார்க்கும் பார்வையை என்னால் ஏற்று கொள்ள முடியவில்லை. அவர்களின் பார்வையிலிருந்து தப்பிக்கவே பெரும்பாலும் வீட்டிற்குள்ளேயே முடங்கி கிடக்கும் சூழலில் தவிப்பதாக குறிப்பிட்டார்.

மூதாட்டி நாயக் குமாரியின் பிறவி குறைபாடு குறித்து கருத்து தெரிவித்துள்ள மருத்துவர்கள், இது மரபணு மாற்றங்களால் ஏற்பட்டுள்ள பிறவிக் குறைப்பாடு. இது மாதிரியான குறை 5,000 பேரில் ஒருவருக்கு ஏற்படுவதாகக் கூறியுள்ளனர்.

## சத்தீஸ்கரில் வாகனங்களுக்கு தீ வைத்த நக்ஸலைட்டுகள்



சத்தீஸ்கரில் 9 வாகனங்களை நக்ஸலைட்டுகள் தீயிட்டு எரித்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுக்மா மாவட்டம் தான்டேவாடா பகுதிக்கு வந்த நக்ஸலைட் தீவிரவாதிகள், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜே.சி.பி. இயந்திரம், சரக்கு லொறி உள்ளிட்ட 9 வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். இது குறித்த தகவலின்பேரில் மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையினர் சம்பவ இடம் சென்று தீயை அணைக்க முயற்சித்தனர்.

அப்போது மறைந்திருந்த நக்ஸலைட்டுகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடைபெற்றது. இதில் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் நக்ஸலைட்டுகள் தப்பியோடி விட்டனர். அவர்களை பாதுகாப்புப் படையினர் தேடி வருகின்றனர்.

## நித்தியானந்தாவின் ஆசிரமத்தில் பாலியல் வன்கொடுமை எனப் புகார்



தலைமறைவாக உள்ள நித்தியானந்தாவால் தமது மகள்களின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக கூறியுள்ள ஜனார்தன சர்மா, நித்தியானந்தா ஆசிரமத்தில் சிறுமிகள் மற்றும் பெண்கள் பாலியல் பலாத்காரம் போன்ற கொடுமைகளுக்கு ஆளாகின்றனர் என முறைப்பாடு அளித்துள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இரண்டு சிறுவர்களை அடைத்து வைத்துக்குழந்தைத்தொழிலாளர்களாகப்பயன்படுத்தியதாக நித்தியானந்தா ஆசிரம் மீது புகார் எழுந்தது.

சிறுவர்களை வைத்து ஆசிரமத்திற்கு நிதி திரட்டினர் எனவும், அப்போது சிறுவர்களை அடித்து துன்புறுத்தினர் எனவும் நித்தியானந்தாவின் பெண் சீடர்கள் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த விவகாரத்தில் குழந்தைகளை சட்டவிரோதமாக அடைத்து வைத்திருந்தது உள்ளிட்ட முறைப்பாடுகளில் நித்தியானந்தா மீதும் அகமதாபாத் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். தனிப்படை பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர். ஆனால் தான் எங்கும் தப்பிச் செல்லவில்லை என்று வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டு நித்யானந்தா விளக்கம் அளித்தார்.

இதனிடையே நித்தியானந்தா ஆசிரமத்தில் அடைபட்டிருக்கும் தமது மகள்களை மீட்டுத் தரக்கோரி ஜனார்தன சர்மா என்பவர் முறைப்பாடு அளித்திருந்தார்.

டெல்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ஜனார்தன சர்மா, பெங்களூரில் நித்தியானந்தாவின் குருகுலத்தில் தமது மூன்று மகள்களையும் மகனையும் சேர்த்தார் எனவும் தானும் நித்தியானந்தாவின் ஆசிரமத்தில் செயலாளராக நியமிக்கப்பட்டார் எனவும் தெரிவித்தார்.

நித்தியானந்தாவுடன் சுற்றுப்பயணத்திற்கு தமது மகள்கள் அழைத்துச் செல்லப்பட்டனர் எனக் கூறிய சர்மா, அதன்பின்னர் தமது மூத்த மகள் திரும்பவில்லை என முறைப்பாடு தெரிவித்துள்ளார்

அவரைச் சந்திக்க அனுமதிக்காதமையால் பொலிஸில் தாம் முறைப்பாடு அளித்தார் எனத் தெரிவித்த ஜனார்தன சர்மா, ஆசிரமத்தில் பெண்களுக்கு பாலியல் வன்கொடுமைகள் நடக்கின்றன எனத் தமது மகள்கள் கூறினர் எனத் தெரிவித்துள்ளார். தமது மகள்களின் உயிருக்கு ஆபத்து இருப்பதால் அவர்களை மீட்டுத் தரவேண்டும் என்றும் ஜனார்தன சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஆப்கானில்தானில் சரணடைந்த தீவிரவாதிகளில் 10 பேர் இந்தியர்

ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த 900 பேர் அந்நாட்டு பாதுகாப்பு படைகளிடம் சரணடைந்திருக்கின்றனர் எனவும், அதில் 10 பேர் இந்தியர்கள் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹர் மாகாணத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்திற்கு எதிராகப் பாதுகாப்பு படையினர் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். கடந்த 12ஆம் திகதி நடவடிக்கையின்போது, 13 பாகிஸ்தானியர்கள் உள்ளிட்ட 93 ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர்.



இதேபோல, கடந்த இருவாரங்களில் மொத்தம் 900 பேர் சரணடைந்துள்ள னர் எனவும், அதில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சரணடைந் தவர்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், அவர்களது குடும்பத்தினரும் அடக்கம்.

அந்த வகையில், இந்தியாவைச் சேர்ந்த பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட 10 பேர் சரணடைந்துள்ளனர் எனவும், அதில் கேரளத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் எனவும் சொல்லப்படுகிறது.

தற்போது இந்த 10 பேரும் காபூலிலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்கள் யார் என்ற விவரங்களை அதிகாரிகள் திரட்டி வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

# மலேசியாவில் முழுதும் அழிந்தது சுமத்திரா காண்டாமிருக இனம்



அரியமற்றும்அபூர்வவகையான சுமத்ரா காண்டாமிருகம் தங்கள் நாட்டில் முற்றிலும் அழிந்து விட்டதாக மலேசியா அறிவித்துள்ளது.

இமான்என்றுபெயரிடப்பட்டஆண் சுமத்ரா காண்டாமிருகம் கடந்த 6 மாதங்களாக புற்று நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

போர்னியோ தீவின் சபா மாகாணத்தில் வளர்க்கப்பட்டு வந்த அந்த காண்டாமிருகம் இறப்பதற்கு முன்பாக அதனிடமிருந்து உயிரணுக்கள் எடுக்கப்பட்டுள்ளன என மலேசிய உயிரியல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்பிரிக்க, ஆசிய காண்டாமிருகங்களை விட உருவத்தில் சிறியதான சுமத்திரா காண்டாமிருகம் தற்போது உலக அளவில் வெறும் 80 என்ற எண்ணிக்கையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்த இனத்தைப் பெருக்குவது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

# ஜப்பான் நாகசாகியில் பாப்பாண்டவர் அஞ்சலி





ஜப்பான் சென்றுள்ள புனித பாப்பரசர் பிரான்ஸிஸ், நாகசாகியிலுள்ள நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கொட்டும் மழைக்கு மத்தியில் பேசிய பாப்பரசர், அணுகுண்டுகளை உலகநாடுகள் அழிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

1945ம் ஆண்டில் ஜப்பானின் ஹிரோசிமா மற்றும் நாகசாகியில் அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது. இதில் நாகசாகியில் மட்டும் 27 ஆயிரம் பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்என்பதுகுறிப்பிடத்தக்கது.

# கொங்கோ விமான விபத்தில் உயிரிழப்பு 27 ஆக உயர்வு!









ஆப்பிரிக்க நாடான கொங்கோவில் ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டின் கிழக்கு நகரமான கொமாவில் இருந்து busy bee என்ற நிறுவனத்தின் 19 இருக்கைகள் கொண்ட டர்னியர் ரக விமானம் நேற்றுமுன்தினம் காலை புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானத்தின் இயந்திரப பகுதி பழுதானதால், விமானி விமான நிலையத்திற்குத் திரும்பிச் செல்ல முயன்றார்.

ஆனால் எதிர்பாராத விதமாக அந்த விமானம் அப்பகுதியில் இருந்த குடியிருப்பு பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 17 பயணிகள் 2 ஊழியர்கள் மற்றும் விமானம் விழுந்த குடியிருப்புகளில் இருந்த 7 பேர் உயிரிழந்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்தமையைத் தொடர்ந்து பலி எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

# டயருக்குள் மாட்டி தவிக்கும் முதலை





இந்தோனேஷியாவில் கழுத்தில் சிக்கிய டயருடன் இருக்கும் முதலையைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுலவாசி தீவின் தலைநகரான பலூவில் உள்ள ஆற்றில் சயாமிஸ் முதலைகள் ஏராளமாக உள்ளன. இந்நிலையில் 3 ஆண்டுகளுக்கு முன்னர் யாரோ ஒருவர் வீசியெறிந்த இருசக்கர வாகனத்தின் டயர் ஒன்று முதலையின் கழுத்தில் சிக்கிக் கொண்டது.

உணவை வேட்டையாடி விழுங்கினாலும் அதன் தொண்டைப் பகுதியில் டயர் இறுக்கமாக இருப்பதால் முதலையால் உணவை சரிவர விழுங்க முடியாத நிலை உள்ளது. இதனால் அந்த முதலை பட்டினியால் வாடும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனைக் கண்ட இந்தோனேஷிய வனத்துறை அதிகாரிகள் முதலையைப் பிடித்து டயரை அகற்ற முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்

# கென்யாவில் நிலச்சரிவில் 60 பேர் சாவு!

நைரோபி,நவ.26

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. கென்யாவின் வடமேற்கு பகுதியில், உகாண்டா எல்லையில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் சாலைகள், கட்டடங்கள் மற்றும் பாலங்கள் கடும் சேதமடைந்தன.

இந்த நிலச்சரிவில் சிக்கி 7 குழந்தைகள் உள்பட 60 பேர் உயிரிழந்தனர். மேலும் காணாமல் போன 7 பேரை தேடும் பணி நடந்து வருகிறது. இது குறித்து வடக்கு மாகாண கவர்னர் ஜான் க்ராப் கூறியபோது, "நேற்று இரவு கண்டதைப் போன்ற அவலங்களை நாங்கள் இதுவரை கண்டதில்லை" - என்றார்.

காவல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்க வாய்ப்புள்ளது எனக் கூறப்படுகின்றது.



# புலிகளின் பிறப்பும் தலைவனின் பிறப்பும்



**தமிழ்த் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த தினம் இன்றாகும். அவர் குறித்து அவரது மதியுரைஞராக விளங்கிய தத்துவாசிரியர் அன்டன் பாலசிங்கம் தமது 'போரும் சமாதானமும்' என்ற நூலில் குறிப்பிட்ட கருத்துகளின் ஒரு பகுதி இங்கு பிரசுர மாகுகின்றது.**

.........அன்று தலைமறைவாகிய இளம் தீவிரவாதப் போராளிகள் ஓர் அற்புதமான இளைஞரும் இருந்தார். இவர், தமிழ் மக்கள் விடுதலைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்த இளம் மாவீரன். காவல் துறையினரின் தீவிர வேட்டைக் இலக்காகியிருந்த அந்த இளம் புரட்சிவாதிக்கு அப்பொழுது வயது பதினாறு. அன்றைய காலத்து விடுதலைப் போராளிகளின் வரிசையில் இவரே வயதில் மிக இளையவராவார். இவரே வேலுப்பிள்ளை பிரபாகரன். தமிழரின் தேச சுதந்திர இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டியெழுப்பி, ஒப்பற்ற ஆயுதப் போரியல் பாதைக்கு அத்திவாரமிட்ட வரலாற்று நாயகன்.


யாழ்ப்பாண தீபகற்பத்தின் வடகடலோரப் பட்டினமாகிய வல்வெட்டித்துறையில் 1954 நவம்பர் 26ஆம் நாள் பிரபாகரன் பிறந்தார். வரலாற்றின்படி பார்த்தால், தீரமிகு கப்பலோட்டிகளும், துணிச்சல் மிகுந்த கடத்தல் வேட்டைக்காரரும் வாழ்ந்த இடமாக வல்வெட்டித்துறை கருதப்படுகிறது. சிங்கள இனவாத அடக்குமுறை அரசுக்கு எதிராக தீவிரவாத எதிர்ப்புணர்வை காட்டுவதிலும் வல்வெட்டித்துறை புகழ்பெற்றது. தாயகப் பற்றும், தேசிய விடுதலை உணர்வும் மிக்க நிகரற்ற சுதந்திரப் போராளிகளை பெற்றெடுத்த புனித மண்ணாக இது விளங்குகிறது.

திருவேங்கடம் வேலுப்பிள்ளை – வல்லிபுரம் பார்வதி தம்பதியாரின் கடைசிப் பிள்ளை பிரபாகரன். இவருக்கு இரண்டு சகோதரிகள். ஒரு சகோதரன். அப்பா ஓர் அரசாங்க ஊழியர். மாவட்ட காணி அதிகாரி. அப்பழுக்கற்ற நடத்தை. இனிமையான சுபாவம். மென்மையான போக்கு. அவதிப்பட்டோருக்கு ஓடிச் சென்று உதவும் பாங்கு, ஊரிலும் உலகிலும் பிரபாகரனின் அப்பாவுக்கு நல்ல மதிப்பு.

இளம்பிராயத்தில் மிகுந்த நுண்ணறிவும் விழிப்புணர்வும் கொண்டிருந்த பிரபாகரன், தனது மக்கள் வாழ்ந்த அடக்குமுறையான சூழ்நிலையையும் அவர்கள் அனுபவித்து வந்த ஆழமான துன்ப துயரங்களையும் உணர்ந்து கொண்டார். இன ஒடுக்குமுறையின் கோரமான தன்மையையும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட மிருகத்தனமான அட்டூழியங்களையும் சிறு பிராயத்திலிருந்தே, பல வழிகளில் தனது குடும்பத்தினர், நண்பர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கிராமத்து முதியவர்கள் ஆகியோரிடமிருந்து அறிந்து கொண்டார். அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வதைகளையும் கொடுமைகளையும் கேட்டறிந்தபோது இளம் பிரபாகரனின் இதயத்தில் வெஞ்சினம் பொங்கியது. ஒடுக்கப்பட்ட தனது மக்கள் வாய்மூடி மௌனிகளாக தொடர்ந்தும் இக் கொடுமைகளை அனுபவிக்காது, அடக்குமுறை ஆட்சியாளருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடவேண்டுமென்று பிரபாகரன் எண்ணினார். மனிதர்கள் தமது விருப்புகள், அபிலாஷைகளுக்கு அமைவாக சுயாதீனமாக வாழும் உரிமைதான் சுதந்திரமென அவர் கருதினார். வெளி அழுத்தங்களிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறும்பொழுதுதான் உண்மையான சுதந்திரத்தை மனிதர்கள் சுகிக்க முடியும் என்றும் பிரபாகரன் நம்பினார். சுதந்திரம் என்ற இந்த உன்னதமான வாழ்வியல் விழுமியத்தை அடைவதற்கு, சில சூழ்நிலைகளில் பெரும் தியாகங்கள் புரிந்து, அர்ப்பணிப்புகள் செய்து போராடுவது அவசியம் என்றும் அவர் சிந்தித்தார். இளம் புரட்சிவாதியான பிரபாகரனுக்கு சுதந்திரம் என்பது இதய பாசமாயிற்று. சுதந்திரத்திற்காகப் போராடுவது என்பது தணியாத தாகமாயிற்று. பள்ளிப் படிப்பு பிரபாகரனை வெகுவாகக் கவரவில்லை. மானிட சுதந்திரம் பற்றியும், சுந்திரத்தை அடைய மனிதர்கள் தொடுத்த போராட்ட வரலாறு பற்றியும் நிறையக் கற்றறிய வேண்டும் என்பதே இளம் பிரபாகரனின் வேட்கையாக இருந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் கொந்தளிப்பான வரலாறு பிரபாகரனை வெகுவாகக் கவர்ந்தது. அக்காலத் தமிழ் அரசியல்வாதிகள் மகாத்மா காந்தியை வழிபட்டனர். காந்திஜியின் அகிம்சைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சாத்வீகப் போராட்ட முறையைத் தழுவினர்.

பிரித்தானிய குடியேற்ற ஆட்சிக்கு எதிராக வன்முறைப் போர்தொடுத்த சுபாஷ் சந்திரபோஸ், பகத் சிங் ஆகிய கிளர்ச்சியாளரே பிரபாகரனை வெகுவாகக் கவர்ந்தனர். ஆங்கில ஆட்சியாளருக்கு எதிராகத் தலைமறைவுத் தாக்குதல்களை நடத்திவந்த சீக்கிய இளம் புரட்சிவாதியான பகத் சிங்கை விட சுபாஸின் விடுதலைப் போராட்ட வரலாறே பிரபாகரனை வெகுவாக ஈர்த்தது. பிரித்தானியருக்கு எதிராக இந்திய தேசிய விடுதலையை வென்றெடுக்க ஆயுதப் போராட்டமே உகந்த வழியெனக் கருதி, ஒரு தேசிய விடுதலை இராணுவத்தைக் கட்டியெழுப்பிய சுபாஸின் துணிச்சலை பெரிதும் மதித்த இளம் பிரபாகரன், அந்த இந்திய சுதந்திர வீரனின் வாழ்க்கை பற்றியும் சிந்தனை பற்றியும் நிறைய வாசித்தார். சுபாஸின் பிரசித்தி பெற்ற உரைகள் இவருக்கு ஊக்கத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்தன. மகாத்மா காந்தியின் சிந்தனைகளையும் பிரபாகரன் படிக்கத் தவறவில்லை. காந்திஜியின் அகிம்சைத் தத்துவத்தின் அடிநாதமாக விளங்கிய ஆன்மீக அறநெறிப் பண்புகளுக்கு அவர் மதிப்பளித்த போதும், அவை தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பொருத்தமாக அமையுமா என்பதில் பிரபாகரனுக்கு ஆழமான ஐயப்பாடு இருந்தது. சிங்கள இனவாத அரசின் ஈவிரக்கமற்ற அடக்குமுறைப் போக்கு அகிம்சைவாத அறநெறிப் பண்புகளுக்கு மதிப்பளிக்கப் போவதில்லை என்பதை தமிழரின் அரசியல் வரலாற்றிலிருந்து பிரபாகரன் ஏற்கனவே அறிந்து கொண்டார். இந்தியக் காவியமான மகாபாரதம் இளம் புரட்சிவாதியான பிரபாகரனை மிகவும் கவர்ந்தது. மகாபாரதத்தை தீய சக்திகளுக்கு எதிரான ஒரு தர்ம யுத்தமாகக் கண்ட பிரபாகரன், ஈற்றில் தர்மமும் சத்தியமுமே வெற்றிகொள்ளும் என்ற மெய்யுண்மையை இக்காவியம் வாயிலாகத் தெளிந்து கொண்டார். வரலாறு படைத்த தமிழ்ப் பேரரசுகள் பற்றியும், தமிழ்ச் சக்கரவர்த்திகளின் வீரம் செறிந்த வரலாறுகள், படையெடுப்புகள், போர்கள் பற்றியும் பிரபாகரன் நிறைய வாசித்தார். தமிழ்ரின் பெருமை மிக்க வரலாறுகள் அவருக்குப் புத்துணர்வை அளித்தன.



அந்நிய குடியேற்ற ஆட்சிக்கு எதிராகதுணிச்சலுடன்ஆயுதவன்முறைப் போரில் குதித்த இந்திய விடுதலை வீரர்களது வாழ்வும் புரட்சிகர சிந்தனையும் இளம் பிரபாகரனை ஆழமாகப் பாதித்தது. பண்டைத் தமிழ் இனத்தின் பழம்பெரும் நாகரீகமும், வீரம்செறிந்த வரலாறும் அவருக்குப் பெருமிதம் அளித்தன. இளம்வயதிலேயே இவற்றையெல்லாம் படித்தறிந்த பிரபாகரன், ஒடுக்கப்பட்டு வாழும் தனது மக்களின் விடுதலைக்காகத் தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துப் போராட உறுதிபூண்டார். கொடூரமான ஒரு அடக்குமுறை ஆட்சிக்கு எதிராகப் போர்தொடுக்கும் ஒரு புரட்சிவாதி எதிர்கொள்ளவேண்டிய பேராபத்துகள் பற்றி பிரபாகரன் உணர்ந்து கொள்ளத் தவறவில்லை. ஆயினும் தேச விடுதலை என்ற பொதுவான தர்மத்திற்காகச் சாவைத் தழுவவும் அவர் தயாராக இருந்தார்.

பதினாறு வயதிலேயே அரசினால் தேடப்பட்டு, தப்பி ஓடித் திரியும் தலைமறைவு வாழ்வை வரித்துக் கொள்ளவேண்டிய அவல நிலை பிரபாகரனுக்கு ஏற்பட்டது. அதுவும், இரகசிய காவல்துறையினரின் கண்துஞ்சாக் கண்காணிப்பு இவரது சொந்தக் கிரா மம் மீது திருப்பப்பட்டு, நள்ளிரவுகளில் இவரது வீடு சுற்றிவளைப்புகளுக்கு இலக்காகியதைத் தொடர்ந்து, தலைமறைவு வாழ்வும் நெருக்கடியானதாக மாறி யது. கைதுசெய்யப்படுவதைத் தடுக்கக் குடும்பத்திலிருந்து பிரிந்து தனித்து வாழவேண்டிய நிர்ப்பந்த மும் ஏற்பட்டது.

(09ஆம் பக்கம் பார்க்க...)



“அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வதைகளையும் கொடுகைளையும் கேட்டறிந்தபோது இளம் பிரபாகர னின் இதயத்தில் வெஞ்சினம் பொங்கியது. ஒடுக்கப்பட்ட தனது மக்கள் வாய்மூடி மௌனிகளாக தொடர்ந்தும் இக் கொடுமைகளை அனுபவிக் காது, அடக்குமுறை ஆட்சியாளருக்கு எதிராகக் கிளர்ந் தெழுந்து போராடவேண்டுமென்று பிரபாகரன் எண்ணினார். மனிதர்கள் தமது விருப்புகள், அபிலாஷைகளுக்கு அமைவாக சுயாதீனமாக வாழும் உரிமைதான் சுதந்திரமென அவர் கருதினார். வெளி அழுத் தங்களிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெறும்பொழுது தான் உண்மையான சுதந் திரத்தை மனிதர்கள் சுகிக்க முடியும் என்றும் பிரபாகரன் நம்பினார். சுதந்திரம் என்ற இந்த உன்னதமான வாழ்வியல் விழுமியத்தை அடைவதற்கு, சில சூழ்நிலை களில் பெரும் தியாகங்கள் புரிந்து, அர்ப் பணிப்புகள் செய்து போராடுவது அவசியம் என்றும் அவர் சிந்தித்தார். இளம் புரட்சிவாதியான பிரபாகரனுக்கு சுதந்திரம் என்பது இதய பாசமாயிற்று. சுதந்திரத்திற்காகப் போராடுவது என்பது தணியாத தாகமாயிற்று. பள்ளிப் படிப்பு பிரபாகரனை வெகுவாகக் கவரவில்லை .”

# அரச சார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களுக்கு அடிபணியேன்

## கோட்டாபய திட்டவட்டம்

கொழும்பு, நவ. 26

அரச சார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களுக்கு தான் ஒருபோதும் அடிபணியமாட்டார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையில் நேற்று முன் தினம் பௌத்த பிக்குகள் மத்தியில் கருத்து வெளியிட்ட அவர் –

எனக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அந்த ஆணையின் படியே நான் செயற்படுவேன்.

ஒரு நோக்கத்துக்காகவே என்னை மக்கள் தெரிவு செய்தனர். அவர்கள் விரும்பியதை நிறைவேற்றி வைக்கவேண்டும்.

சில அரச சார்பற்ற நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கமைய, குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் சிலர் விசாரணைகளை நடத்தினர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# நிஷாந்த சில்வா ஜெனிவாவுக்கே சென்றாராம் என்கிறார் கோட்டா

கொழும்பு, நவ. 26

தங்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்ட குற்ற விசாரணைத் திணைக்களத்தின் தலைமை ஆய்வாளர் நிஷாந்த சில்வா ஜெனிவாவுக்குச் சென்றிருக்கவேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமகா விகாரைக்கு நேற்று முன் தினம் சென்றிருந்த கோட்டாபய ராஜபக்ஷ அங்கு, விகாராதிபதி மற்றும் பௌத்த பிக்குகளுடன் உரையாடும் போது இதுபற்றி தகவல் வெளியிட்டுள்ளார்.

எங்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்ட நிஷாந்த சில்வா நாட்டை விட்டு வெளியேறினார் என நான் கேள்விப்படுகிறேன். அவர் ஜெனிவாவுக்குச் சென்றிருக்க வேண் டும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.



# புலிகளின் பிறப்பும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்குவதற்கு வதிவிடமின்றி, நாளுக்கு நாள் அங்குமிங்குமாக அலைந்து திரிவதும், பகலில் பதுங்கி ஒளிந்திருந்து இரவில் மட்டும் நடமாடுவதுமான ஒரு நாடோடி வாழ்க்கை . நிம்மதியாகத் தூங்குவதற்கு வாய்ப்புமில்லை வழியுமில்லை. இந்துக் கோவிலுள்ள மடங்கள், தேர்கள், கூரைகள், அனாதரவாக விடப் பட்ட பாழடைந்த வீடுகள், காய்கறித் தோட்டங்கள் இப்படியாக அந்தந்த வேளைக்கு கிட்டும் இடங்களில், அதுவும் சில மணி நேரம் மட்டும் தூங் குவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று என்னிடம் ஒருதடவை தனது நாடோடி வாழ்க்கைபற்றி வவரிக்கும் போது பிரபாகரன் சொன்னார்.

பசிவதை அவரை சதா உறுத்தியது. சில சமயங்களில், முழு நாளாகப் பட்டினி கிடந்து துன்புற வேண்டியிருந்தது. பசி தாங்க முடியாமல், சில இரவுகளில், காய்கறித் தோட்டங்களுக்குள் நுழைந்து மரவள்ளிச் செடியைப் பிடுங்கி, கிழங்குகளை தோண்டியெடுத்து பச்சையாகப் பச்சை மிளகாயுடன் சேர்த்து உண்ணும்போது அமிர்தமாக இருக்குமென என்னிடம் சொன்னார். இளம் போராளியாக விடுதலைப் பாதையில் காலடி வைத்த காலத்திலிருந்தே பயன் உபாதைக்குப் பழகிக் கொண்டார் பிரபாகரன். தணியாத இலட்சியப் பசி பிரபாகரனின் வயிற்றுப் பசிக்கு தீனி போட்டது.

பத்தில் அனுபவித்த இடர்கள், துன்பங்கள், அவர் எதிர்கொண்ட சோதனைகள், சவால்கள், ஆபத்துக்கள் எல்லாமே அவரது இலட்சிய உறுதிக்கு உரமூட்டின.

தனி மனிதனாக நின்று, தலைமறைவு வாழ்க்கையை வரித்துக் கொண்டு பிரமாண்டமான அரச அடக்குமுறை யந்திரத்தை எதிர்த்து நின்ற இளம் புரட்சிவாதியான பிரபாகரனுக்கு, செம்மையாகத் திட்டமிடப் படாது தனித் தனிச் சம்பவங்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்து வந்த அரசியல் வன்முறைச் செயல்கள் அர்த்தமற்றவையாகப் புலப்பட்டது. இவை, தமிழரின் அரசியல் போராட்டத்தை முன்நகர்த்தப் போவதில்லைஎன்பதையும்உணர்ந்து கொண்டார். இவரோடு சமகாலத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் ஒருவர் பின் ஒருவராக காவல்துறையினரால் கைதாகி சிறையில் வாடிக் கொண்டிருந்தார்கள். தனிநபர்களால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வன்முறை நடவடிக்கைகளும் செம்மையாக ஒழுங்கமைக்கப்படாமல் தேர்ச்சியின்றிக் கையாளப்பட்டதால் அவை பிசுபிசுத்துப் போனதையும் இவர் கண்டறிந்து கொண்டார். தீவிரவாத இளைஞரின் அரசியல் வன்முறைப் போராட்ட நடவடிக்கைகளை ஆழமாகப் பார்த்த போது, அவை ஏற்படுத்திய எதிர்மறையான அரசியல் விளைவுகளையும், அதனால் தீவிரப்படுத்தப் பட்ட அரச ஒடுக்குமுறையின் பாதிப்புகளையும் அவர் உணர்ந்து கொண்டார். இவற்றிலிருந்து பிரபாகரனுக்கு ஒரு உண்மை தெட்டத் தெளிவாகப் புரிந்தது. ஒழுங்கமைவான ஆயுதப் போராட்ட வழிமுறை வாயிலாக, தேசிய விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு புரட்சிகர அரசியல் அமைப்பு அவசியமானதும் வரலாற்றுத் தேவையானதும் என்பதை அவா புரிந்து கொண்டார். ஆயுதப் போராட்டத்திற்கு அத்தியாவசியமான ஒரு தலைமை, வழிகாட்டல், ஒழுங்கமைவான கட்டமைப்பு ஆகியவற்றை மாணவர் பேரவைத் தலைவர்கள் வழங்குவார்கள் என்று பிரபாகரன் நம்பியிருந்தார். ஆனால் இப் புரட்சிகரம் பணியை மேற்கொள்வதில் இந்தத் தலைவர்கள் ஈடுபாடு காட்டாததால் இவருடைய எதிர்பார்ப்பு தவிடுபொடியாயிற்று. பேரவைத் தலைவர்கள் கைதாகிச் சிறைப்படுத்தப்பட, பேரவையும் செயலிழந்து செத்துப் போனது. இதனால் உருவாகிய அரசியல் வெற்றிடத்தையும் அதேவேளை தீவிரமாகிச் செல்லும் அரச ஒடுக்குமுறைச் சூழலையும் எதிர்கொள்வதற்கு, புரட்சிகர அமைப்பு ஒன்றை நிறுவ வேண்டிய அவசியத் தேவை நிலவியது. இங்கே ஒரு முக்கிய தீர்மானத்துக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் பிரபாகரனுக்கு ஏற்பட்டது. தனது தலைமையின் கீழ் ஆயுதம் தரித்த அமைப்பு ஒன்றை நிறுவுவதென, இறுதியில் அவர் தீர்மானித்தார். இத்தகைய வரலாற்றுச் சூழலிலேயே 1972இல் தமிழ்ப் புலிகள் இயக்கம் வரலாற்று ரீதியாக பிறப்பு எடுத்தது. இதன் ஆரம்பத்தின்போது புதிய தமிழ்ப் புலிகள் என்று அவ்வமைப்புதன்னை அழைத்துக் கொண்டது. பின்னர், 1976 மே 5 அன்று, அதன் உறுப்பினர்கள் தம் அமைப்பின் பெயரை தமிழீழ விடுதலைப் புலிகள் என்று மீளப் பெயர் சூட்டிக் கொண்டார்கள்.

# துயிலுமில்லச் சிரமதானப் பணியில் ஈடுபட்டவர் விசாரணைக்கு அழைப்பு

முல்லைத்தீவு, நவ. 26

முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்காக துப்புரவுப் பணிகளைச் செய்த உழவு இயந்திரச் சாரதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகளை முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லத்தில் நடத்தும் வகையில் அண்மை நாட்களாகப் பிரதேச மக்கள் துப்பரவு பணிகளை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று முன் தினம் அந்தப் பகுதிக்கு சென்ற இராணுவப் புலனாய்வாளர்கள் மாவீரர் நாளை பெரிதாகச் செய்ய முடியாது என்ற வகையில் மக்களை அச்சுறுத்தியுள்ளதோடு, துயிலுமில்லத்தில் ஏற்பாட்டுப் பணிகளை மேற்கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளரிடம் தொலைபேசி இலக்கம் மற்றும் பெயர் என்பனவற்றையும் பெற்றுச் சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மாலை துப்பரவுப் பணிக்காக உழவு இயந்திரத்தைப் பாவித்த அதன் உரிமையாளரை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு வருகை தருமாறு கூறிவிட்டுச் சென்றுள்ளனர். (ஐ)

# இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு ஒத்திவைப்பு!

கொழும்பு, நவ. 26

இராஜாங்க அமைச்சர்கள் நேற்றுப் பதவியேற்கவிருந்த நிகழ்வு நாளை புதன்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்களின் கீழ் வரும் நிறுவனங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர் இன்று இராஜாங்க அமைச்சுப் பதவிகள் இறுதி செய்யப்படுமெனத் தெரிகிறது.

கடந்த அமைச்சரவை நியமனத்தில் கவனிக்கப்படாத மாவட்டங்கள் இந்த இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கலின் போது முக்கிய கவனத் தில் கொள்ளப்படவுள்ளன.

கெஹெலிய ரம்புக்வெல, மஹிந்தானந்த அழுத்கமகே, காமினி லொக்குகே ,சி.பி.ரத்நாயக்க, ரோஹித்த அபேகுணவர்தன, மஹிந்த யாப்பா அபேவர்தன, கனக ஹேரத், ஹொான் சேமசிங்க ,சனத் நிஷாந்த, காஞ்சன விஜேசேகர, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, ரொஷான் ரணசிங்க ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சுக்கள் வழங்கப்படவுள்ளன.

முஸ்லிம் எம்.பி. ஒருவரும் தமிழ் எம்.பிக்கள் இருவரும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளனர். (ஐ)



# முதல் பகலிரவு டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தியது இந்தியா




பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இந்தியா அணி இன்னிங்ஸ் மற்றும் 46 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, 2 –0 என்ற கணக்கில் இந்தியா அணி கைப்பற்றியது.

அத்தோடு இத்தொடரின் வெற்றியின் மூலம் 120 புள்ளிகளை பெற்றுக்கொண்ட இந்தியா அணி, 360 புள்ளிகளுடன் தர வரிசையில் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

கடந்த 22ஆம் திகதி கொல்கத்தா – ஈடன் கார்டன் மைதானத்தில் பகலிரவு டெஸ்ட் போட்டியாக ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, முதல் இன்னிங்ஸிற்காக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களை பெற்றது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக சத்மான் இஸ்லாம் 29 ஓட்டங்களையும், லிடொன் தாஸ் 24 ஓட்டங்களையும், நயீம் ஹஸன் 19 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், இசாந் சர்மா 5 விக்கெட்டுகளையும், உமேஷ் யாதவ் 3 விக்கெட்டுகளையும், மொஹமட் மி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 347 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக, அணித்தலைவர் விராட் கோஹ்லி 136 ஓட்டங்களையும், புஜாரா 55 ஓட்டங்களையும், அஜிங்கியா ரஹானே 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, 241 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 195 ஓட்டங்களுக்குச் சுருண்டது. இதனால் இந்தியா அணி, இன்னிங்ஸ் மற்றும் 46 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்தது.

இதன்போது பங்களாதேஷ் அணி சார்பில், அதிகபட்ச ஓட்டங்களாக, முஷ்பிகுர் ரஹீம் 74 ஓட்டங்களையும், மொஹமதுல்லா 34 ஓட்டங்ளையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியா அணியின் பந்துவீச்சில், உமேஷ் யாதவ் 5 விக்கெட்டுகளையும், இசாந் சர்மா 4 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் இந்தியா அணியின் வேகப்பந்து வீச்சாளர் இசாந்த் சர்மா தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் தனது முதல் பகலிரவு டெஸ்ட் போட்டியிலேயே, இந்தியா அணி வெற்றிபெற்று சாதித்தது.

மேலும், டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக நான்கு போட்டிகளில் இன்னிங்ஸ் வெற்றி கண்ட ஒரே அணி என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இதுதவிர, இந்திய ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சாளர்கள் பங்கு இல்லாமல் இந்தியா அணி பெற்ற முதல் வெற்றியாக இந்த வெற்றி பதிவு செய்யப்பட்டது.

# முதலாவது டெஸ்ட்டில் நியூஸிலாந்து வெற்றி!

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1 – 0 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

அத்தோடு, ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான 60 புள்ளிகளையும் நியூஸிலாந்து அணி, பெற்றுக் கொண்டது.

மவுண்ட் மவுண்கானுய் மைதானத்தில் கடந்த 21ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில். நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 353 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பென் ஸ்டோக்ஸ் 91 ஓட்டங்களையும், ஜோ டென்லி 74 ஓட்டங்களையும், ரொறி பர்ன்ஸ் 52 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தீ 4 விக்கெட்டுகளையும், நெய்ல் வாக்னர் 3 விக்கெட்டுகளையும், கொலின் டி கிராண்ட்ஹோமி 2 விக்கெட்டுகளையும், ட்ரெண்ட் போல்ட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூஸிலாந்து அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 615 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதன்போது நியூஸிலாந்து அணி சார்பில், அதிகபட்ச ஓட்டங்களாக பிஜே வாட்லிங் 205 ஓட்டங்களையும், மிட்செல் சான்ட்னர் 126 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 51 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.



இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், சேம் கர்ரன் 3 விக்கெட்டுகளையும், ஜெக் லீச் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஜெப்ரா ஆர்செர் மற்றும் இயான் மோர்கன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 262 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி, 197 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் நியூஸிலாந்து அணி, இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது இங்கிலாந்து அணி சார்பில், அதிகபட்ச ஓட்டங்களாக ஜோ டென்லி 35 ஓட்டங்களையும், ரொறி பர்ன்ஸ் 31 ஓட்டங்களையும், ஜொப்ரா ஆர்செர் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், நெய்ல் வாக்னர் 5 விக்கெட்டுகளையும், மிட்செல் சான்ட்னர் 3 விக்கெட்டுகளையும், டிம் சவுத்தீ மற்றும் கொலின் டி கிராண்ட்ஹோமி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 205 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட பிஜே வாட்லிங் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 28ஆம் திகதி ஹெமில்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# 6ஆவது முறையாக சம்பியன் வென்றது ஸ்பெயின் அணி!

ரென்னிஸ் உலகக் கிண்ணம் என அனைவராலும் பேசப்படும், டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடர், இனிதே நிறைவுப் பெற்றுள்ளது.

ஆண்கள் டென்னிஸ் விளையாட்டில், ஓர் முதன்மையான, பன்னாட்டு அணி விளையாட்டுப் போட்டியாக விளையாடப்படும் டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடர், கிட்டத்தட்ட ஆண்டு முழுவதும் நடைபெறும்.

ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா என 18 அணிகள் இத்தொடரில் பங்கேற்றன. இதில் ஆறு அணிகள் மூன்று குழுக்களாக இத்தொடரில் பங்கேற்றன.

இத்தொடரில் போட்டியொன்றில் இரண்டு ஒற்றையர் பிரிவு போட்டிகளும், ஒரு இரட்டையர் பிரிவு போட்டியும் நடைபெறும்.

ரொபின் ரவுண்ட் முறையில் நடைபெற்ற இத்தொடரில், மகுடத்திற்கான இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் கனடா அணியும் ஸ்பெயின் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில் முதலாவதாக நடைபெற்ற ஒற்றையர் பிரிவு போட்டியில், ஸ்பெயினின் ரோபர்டோ பாடிஸ்டா அகுட்டும், கனடாவின் பெலிக்ஸ் ஆகர் அலியாஷிமும் பலப்பரீட்சை நடத்தினர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை ஏற்படுத்திய இப்போட்டியில், முதல் செற்றே டை பிரேக் வரை நகர்ந்தது. இதில் கடுமையாக போராடி 7 – 6 என ரோபர்டோ பாடிஸ்டா அகுட் செற்றைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய ரோபர்டோ பாடிஸ்டா அகுட் செற்றை 6 – 3 எனக் கைப்பற்றி வெற்றிபெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் தொடரில் 1 – 0 என்ற கணக்கில் ஸ்பெயின் அணி, முன்னிலைப் பெற்றது.

இரண்டாவது ஒற்றையர் பிரிவு போட்டியில், ஸ்பெயினின் ரபேல் நடாலும், கனடாவின் டேனிஸ் பலோவ்வும் மோதிக் கொண்டனர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றை 6 – 3 என ரபேல் நடால் கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், டேனிஸ் பலோவ், ரபேல் நடாலுக்குக் கடும் நெருக்கடி கொடுத்தார்.

டை பிரேக் வரை நீடித்த செற்றில், கடுமையாக போராடி 7 – 6 என ரபேல் நடால் செற்றைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் ஸ்பெயின் அணி, 2 – 0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

இதற்கு முன்னதாக 2000ஆம், 2004ஆம், 2008ஆம், 2009ஆம், 2011ஆம் ஆண்டுகளில் ஸ்பெயின் அணி, சம்பியன் பட்டம் வென்றுள்ளது.



# ஐயப்ப வழிபாட்டின் முக்கியத்துவம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா (ஆஸ்திரேலியா)
(முன்னாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்)

ஐயப்பனது வழிபாடு இன்று யாவராலும் மேற்கொள்ளப்படும் ஒன்றாக விளங்குகிறது. இந்த வழிபாடு இடைவிட்டு வந்த ஒன்றா அல்லது தொன்று தொட்டு வந்த ஒன்றா என்னும் வாதப்பிரதி வாதங்களும் சர்ச்சைகளும் நடந்து கொண்டு இருக்கின்றன. ஆனாலும் ஐயப்ப வழிபாடு மட்டும் தனது நிலையில் உயர்வு பெற்று எல்லோராராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வழிபாடாக வளர்ந்து வருவதையே காண முடிகிறது. அதுமட்டுமல்ல யாவரும் இந்த வழிபாட்டில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதில் பெரிதும் விருப்புடையவர்களாக இருப்பதையும் கண்டு கொள்ள முடி கின்றது.

கந்தபுராணம், விஷ்ணு புராணம், பத்மபுராணம் யாவும் ஐயப்ப வழிபாடு பற்றி எடுத்துச் சொல்லுகின்றன. இப்புராணங்கள் தெய்வத் தன்மை மிக்கன. இவற்றில் ஐயப்பன் பற்றிய குறிப்பும் அவரது தோற்றம் பற்றிய விளக்கங்களும் இருக்கின்ற காரணத்தால் ஐயப்ப வழிபாட்டை இடைநடுவில் வந்தது என்று வாதிடுவதோ, விமர்சிப்பதோ பொருத்தமற்றதாகி விடுகிறது. இதனால் ஐயப்ப வழிபாடானது தொன்று தொட்டே வந்திருக்கிறது என்றே கருதவேண்டி இருக்கிறதல்லவா?

ஐயப்பனை தர்மசாஸ்த்தா என்றும் பெயரிட்டும் வழிபடுவர். சாத்தன் என்பது காவலுக்குரிய தெய்வமாகாக விளங்கியிருக்கிறது. சாஸ்த்தா என்பது சமஸ்கிருதத்தில் வழங்கப்பட அதுவே தமிழில் சாத்தா எனமருவி பின்னர் சாத்தனார் ஆகியது எனவும் வரலாற்றால் அறியமுடிகிறது.

காவல்தெய்வமாகவிளங்கினார்என்பதற்கு அவரின் மற்றொரு பெயரான பூதநாதன் என்பதும் பொருந்துவதாக இருப்பதாக வரலாறு சுட்டி நிற்கிறது. விநாயகப் பெருமானை கணங்களுக்கு அதிபதி என்ற நிலையில் கணபதி என்கிறோம். தேவசேனைகளின் அதிபதியாக விளங்குவதால் முருகப்பெருமானை! தேவசேனாபதி என்கின்றோம். ஐயப்பன் பூத கணங்களுக்குத் தலைமை தாங்குவதால் அவரை பூதநாதன் எனப் போற்றுகின்றோம்.

இதில் இன்னுமொரு அர்த்தத்தையும் நாம் கண்டுகொள்ளலாம். இந்த மனித சரீரமானது பஞ்சபூதங்களால் ஆனது. எனவே பஞ்சபூதங்களும் எந்த நேரமும் மனிதர்களை ஆட்டிப்படைக்கும் வல்லமை பெற்றிருக்கும் அல்லவா? அப்படிப் பட்ட மனிதர்களை அந்தப்பூதங்களிடமிருந்து காத்து ரட்சிக்கும் ஆற்றல் பூத நாதனாகிய ஐயப்பனால் மட்டுமே முடியும் அல்லவா? இதனாலும் பூதங்களை ஆளும் வல்லமை பெற்றவன் என்ற வகையிலும் பூதநாதன் என்பது பொருத்தமாகி நிற்கிறதுதானே !

ஐயப்ப வழிபாட்டில் பல முக்கிய அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. அதன் காரணமாகவும் அந்த வழிபாட்டை அனைவரும் கைக்கொள்ளுகின்றனரோ என்று கூட எண்ணத்தோன்றுகிறது.

ஒரு மண்டலம் என்பது சாதாரணவிய மல்ல. அந்த ஒரு மண்டலமும் எந்தவிதமான கெட்ட பழக்க வழக்கங்களையும் மனத்தாற்கூட நினையாமல் கைவிட்டே ஐயப்ப வழிபாடு நடத்தப்படுகின்றது. இங்கு மனம் தூய்மை அடைவதோடு வாழ்வும் வெளிச்சம் பெறுமுடிகிறது எனலாம்.

உற்ற நோய் நோற்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை என்னும் வள்ளுவர்

வாக்கு இங்கு போற்றப் படும் நிலையே காணப்படுகின்றது. கடைப்பிடிப்பார்கள் செவ்வனே கடைப்பிடித்தால் சிறப்புத்தான் வந்து நிற்கும். இது ஐயப்ப




வழிபாட்டின் முக்கியத்துவம் எனலாம்.

கடவுளர்களில் பிரம்மச்சாரியாக ஐயப்பன் இருக்கின்றார். அதுமட்டு மல்ல அவரது கைகளிலே எந்த வித ஆயுதங்களும் இல்லை. இது அற்புதமான அமைப்பு அல்லவா? அவரது குழந்தை வடிவமும் புன்சிரிப்புத் தவழும் முகலாவண்யமும் பார்ப்பவர் மனத்தைப் பக்குவப்படுத்திவிடும் அல்லவா?

உலகிலே எங்கு பார்த்தாலும் சண்டை யும் அழிவுகளுமே! ஆயுதக் கலாசாரம் பெருகி அமைதியைக் குலைத்துவிட்டது. இந்த நிலையில் ஆயுதமே கையில் ஏந்தாது அமைதியாயும் சிரிப்போடும் ஐயப்பன் காணப்படுவது அகில உலக அமைதிக்கும் உலகம் தழுவிய சமாதானத்துக்கும் நல்ல ஒரு எடுத்துக்காட்டு அல்லவா ? இதனாலும் இந்த வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.



காமம் என்பதுதான் யாவற்றுக்கும் மூலகாரணமாகும். ஐயப்பன் பிரமச் சாரியாக விளங்கும் நிலையும், அவரது வழிபாட்டை மேற்கொள்ளும் நிலையில் பிரமச்சரியம் கடைப் பிடிக்கும் நிலையும் எம்மிடையே உள்ள சிற்றின்பங் கள் அனைத்தையும் போக்கிவிடும் தன்மையை ஏற்படுத்திவிடும் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. காம எண்ணங்கள் எம்மைவிட்டுப் போய்விட்டால் உலகிலே காணும் யாவுமே ஆனந்த மயமாகவே தோற்றமளிக்கும். அந்த ஆனந்தமும் அற்பம் ஆனதல்ல. அது



இறைத்தன்மை மிக்கதாகவே இருக்கும். இவையெல்லாம் ஐயப்ப வழிபாட்டின் முக்கியத்துவங்கள் எனலாம்.

எமக்குள்ளே இறைவன் இருக்கின்றான். அந்த இறைவனை நாங்கள் முயன்றால் கண்டுவிடலாம் என்று ஆன்றோர்கள் கூறுவார்கள். அதற்கு நல்ல தேடல் வேண்டும்.

"தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான் முகனும்.
தேடிக் காணொனா தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்"

– என்று அருளாளர் ஒருவர்கூறுகின்றார். இது முற்றிலும் உண்மையானதாகும். இந்த அரிய தத்துவத்தை ஐயப்பன் வழிபாடு மிகவும் இலகுபடுத்தி இருக்கிறது.

ஐயப்ப விரதம் இருக்கும் ஐயப்ப பக்தர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வேளை ஒருவராவது மற்றயவரை பெயர்சொல்லி அழைப்பது வழக்கம் அல்ல.

ஒருவரை ஒருவர் சாமி என்றுதான் அழைப்பார்கள். இதுதான் ஐயப்ப வழிபாட்டின் அதியுச்ச நிலை எனலாம். சாதாரண நிலையில் இருக்கும் ஒருவர் சாமி என்னும் நிலைக்கு வருவதை வேறு எந்த வழிபாட்டிலும் காணவே முடியாது. அதனை ஐயப்ப வழிபாடு ஒன்றே தந்து நிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மனிதர்கள் பல பிறவிகளிலும் செய்த பாவங்களும் , புண்ணியங்களும் அவர்களுக்குப் பெரும் பாரமாகவே பிறவி தோறும் வந்து கொண்டிருக்கும்.

இவை இரண்டையும் விடும் பொழுதுதான் பிறவி யென்னும் பிணி அகலும்.

இதனையே சைவ சித்தாந்தம் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் என்றெல்லாம் சொல்லும். இவைவமக்கும்விளங்குவதுசற்றுக்கடினம்தான். ஆனால் ஐயப்ப வழிபாட்டில் இதனை இலகுவாக்கி இருமுடி கட்டுதல் என்று வைத்துவிட்டார்கள். இருமுடியில் ஒன்றில் இறைவனுக்கான நிவேதனப் பொருள்களும் மற்றையதில் அடியவர்களுக்கான பொருள்களுமே அடங்கியிருக்கும். இங்கே இறைவனுக்கானவற்றை புண்ணிய மூடை என்றும் மற்றமையதை பாவ மூடை என்றும் கொள்ளலாம் அல்லவா? இந்த ஆன்மா ஆனது பாவத்தையும் புண்ணியத்தையும் சுமந்த படியே தான் இருக்கும். இறைவனிடம் போகும்பொழுது, அதுவும் பக்தியுடன் பக்குவமாகப் போகும் பொழுது, பாவத்தின்நிலைகுறைந்துபுண்ணியம் மேலோங்க ஆன்மாவின் பாரம் குறைவடையும். இந்த அரிய கருத்தே இருமுடித் தத்துவம் என்று ஐயப்ப வழிபாட்டில் காணப்படுகின்றது என்பது மனத்தில் கொள்ள வேண்டிய கருத்தாகும்.

பகவத்கீதையில் பதினெட்டு அத்தியாயங்கள் இருக்கின்றன. ஐயப்ப தரிசனத்திலும் பதினெட்டுப் படிகள் இருக்கின்றன. பாரதப் போரில் அர்ஜுனன் கலங்கிய கலக்கத்தைத் தெளிவாக்கி இறைதத்துவத்தையும் வாழ்க்கைத் தத்துவத்தையும் பகவான் கண்ணன் காட்டியதுவே கீதையென்னும் வேதமாக வந்தது.

அதே போன்றதுதான் ஐயப்ப வழிபாட்டிலும் பதினெட்டுப் படிகளின் தத்துவம். முதல் ஐந்து படிகளும் கர்மேந்திரியங்களாகவும் அடுத்த ஐந்து படிகளும் ஞானேந்திரியங்களாகவும் அடுத்த நான்குபடிகளும் அந்தக்கரணங்களாகவும் மிகுதி மூன்று படிகளும் முக்குணங்களாகவும் உருவகப்படுத்தப்படுகின்றன. இவற்றைக் கடந்தால் பதினெட்டாம் படியானது இறை தரிசனத்தை காட்ட வல்லது என்னும் அதியுன்னத தத்துவத்தை படிகளைக் கொண்டே ஐயப்ப வழிபாடு உணர்த்தி நிற்கிறது என்பது மிகவும் முக்கியமானதாகும்.

தேங்காயினுள் நெய்விட்டு அதனை ஐயப்ப தரிசனத்தின் பொழுது கொண்டு செல்லும் வழக்கம் இருக்கிறது. தேங்காயில் மூன்று கண்கள் இருக்கின்றன. இவற்றில் ஒருகண்ணை மட்டுமே திறந்து நெய்யினை விடுவார்கள். இங்கே கூட மிகச்சிறந்த தத்துவத்தை ஐயப்ப வழிபாடு காட்டிநிற்கிறது. வ்மனிதர்களுக்கு புறத்தே தெரிவது இரண்டுகண்களே. அதே வேளை மூன்றாவது கண்ணும் இருக்கின்றது. அதனையே அகக்கண் என்கிறார்கள். நெய் என்பது ஆன்ம ஞானம். அதனை உடம்பாகிய தேங்காயினுள் செலுத்த வேண்டுமானால் அதற்கு அகமாகிய கண்ணின் வழியேதான் செலுத்த முடியும்? எனவேதான் தேங்காயின் ஒரு கண்ணைத் திறத்தல் என்பது இங்கே ஏற்படுத்தப்பட்டது. இதனை அனைவரும் விளங்கி வழிபட்டால் நல்லதே.

ஐயப்ப வழிபாட்டில் அரனும் அரியும் இணையும் தன்மை காணப்படுகிறது. அரியும் அரனும் சேர்ந்த வடிவமானதால்தான் அரகரசுதன், ஐயன், ஐயப்பன் என்று போற்றப் படும் நிலை இந்தவழிபாட்டில் ஏற்பட்டது எனலாம்.

இதனால் சைவ – வைஷ்ணவ ஒற்றுமையின் வடிவமாகவும் ஐயப்பனும் அவரது வழிபாடும் அமைந்திருப்பதும் இந்த வழிபாட்டின் மிகமிக முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது என்றும் கொள்ளலாம்.

ஆடுதல், பாடுதல், ஒன்று சேருதல், உணவிட்டு உபசரித்தல், சாதி, மத, ஏற்றத் தாழ்வுகள் பாராமை, சமரசம் என்னும் தாரக மந்திரமே மேலோங்கி இருத்தல், தீவிர வைராக்கியம், இன்முகம் காட்டுதல், இன்சொல்பேசுதல், பெரியவரைக் கனம் செய்யுதல், இப்படிப் பல நிலைகளில் ஐயப்ப வழிபாடு விளங்குகின்ற காரணத்தாலும் இன்றைய உலக நிலையில் மிகவும் முக்கியத்துவம் மிக்க வழிபாடாக ஐயப்ப வழிபாடு திகழ்கின்றது.

'சாமியே சரணம் ஐயப்பா!', 'சாமியே சரணம் ஐயப்பா!'என்னும் ஒலியானது உலகையே ஒன்று கூட்டும் சக்திமிக்கதாக விளங்கி ஐயப்ப வழிபாட்டை உலக வழிபாடாக மாற்றிவிடும் சக்திபெற்றதாக இன்று பிரவாகித்து நிற்கிறது என்பது நிதர்சனமாகும்.

**சரணம் சரணம் ஐயப்பா! சாமிசரணம் ஐயப்பா!**


வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# பஸ் - டிப்பர் நேருக்கு நேர் மோதி அதிகாலை விபத்து

மாங்குளத்தில் நேற்றுச் சம்பவம்




முல்லைத்தீவு, நவ. 26

ஏ – 9 வீதி மாங்குளம் பகுதியில் பஸ் மற்றும் டிப்பர் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் காய மடைந்த இருவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 2.15 மணி யளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த அதிசொகுசு பஸ்ஸும் வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத் துச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்தின்போது டிப்பர் வாகனத்தில் பயணம் செய்த 2 பேர் காயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

மேலும் பஸ்ஸில் மூன்று பேர் மாத்திரமே பயணித்த நிலையில் அவர்கள் எந்தவித காயங்களும் இல்லா மல் அதிஷ்டவசமாகத் தப்பியுள்ளனர்.

இரண்டு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள் ளன. மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

அரியாலை வீட்டில் ஆயுதக் கிடங்கு;

## 8 இடங்களில் தோண்டியும் ஒன்றும் கிடைக்கவில்லை!



யாழ்ப்பாணம், நவ. 26

அரியாலையில் தமிழீழ விடு தலைப் புலிகளின் மீள் உருவாக்கத் துக்குப் பயன்படுத்தப்பட்டதாகப் படை யினரால் தெரிவிக்கப்பட்ட வீட்டுக்குள் ஆயுதங்கள் புதைத்து வைக்கப் பட்டுள்ளன என இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்ட நிலையில் வீட்டுக் குள் 8 இடங்களில் அகழ்வு செய்யப் பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்ட போதும் அங்கு எவையும் கிடைக்க வில்லை.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன் றின் அனுமதியுடன் இந்த அகழ்வுப் பணிகள் நேற்று முன் தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பிக்கப் பட்டன. சம்பந்தப்பட்ட வீட்டின் அறை களுக்குள் சந்தேகிக்கப்படும் 8 இடங்களில் அகழ்வுப் பணிகள் முன் னெடுக்கப்பட்டன. எனினும் அங்கு



எவையும் இருக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த நிலையில் அகழ்வுப் பணிகளைக் கைவிட்ட பொலிஸார் நேற்று முன் தினம் மாலை 5.30 மணிக்கு அங் கிருந்து சென்றனர். தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட பெருமளவு பொலிஸார் இந்த அகழ்வு – தேடுதல் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

## வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை சில நாள்களுக்குத் தொடர வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

நாட்டில் வட கிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை நிலைமை படிப்படியாக உருவாகி வருகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளி யிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந் நிலைமை 2019 நவம்பர் 27ஆம் திகதியிலிருந்து நாடு முழுவதும் முழுமை யாகப் பரவும் சாத்தியம் காணப்படுகின் றது. இதனால் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் காணப்படும் மழையு டனான வானிலை மேலும் தொடரும் சாத்தியம் உள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, தென் மற் றும் ஊவா மாகாணங்களில் அவ்வப் போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தி யம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின் றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளிலும் பொலனறுவை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர் பார்க்கப்படுகின்றது.

ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் அனுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க் கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை அதி கரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின் றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங் களில் சில இடங்களில் காலை வேளை யில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப் படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களி னாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார் கள். (ஐ)




## சுன்னாகத்தில் மீன் வியாபாரி கைது

யாழ்ப்பாணம், நவ. 26

சுன்னாகம் மீன் சந்தையில் கழிவகற்றல் பணியில் ஈடுபட்டிருந்த சுகாதாரத் தொழிலாளியை வெட்டுக் கத்தியைக் காண்பித்து மிரட்டினார் என மீன் வியாபாரி ஒருவர் சுன்னா கம் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங் கட்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்றது.

சுன்னாகம் மீன் சந்தையில் கழிவகற்றல் பணியில் சுகாதாரத் தொழிலாளி ஈடுபட்டுள்ளார். இதன் போது வியாபாரி ஒருவர் கழிவகற்றல் ஒழுங்காக நடைபெறுவதில்லை என்று தொழிலாளியிடம் கேட்டுள் ளார்.

அதனால் இருவருக்கும் இடையே இடம்பெற்ற முறுகல் நிலை ஏற் பட்டது. இதனை அடுத்து தொழி லாளிகள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

சம்பவத்தை அறிந்த வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென் றார். அங்கு சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

சுன்னாகம் மீன் சந்தைக்குச் சென்ற பொலிஸார், வியாபாரியைக் கைது செய்து இழுத்துச் சென்றனர் என்று சந்தையில் கூடியிருந்த வர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து சுகாதாரத் தொழிலாளிகள் கடமையை இடை நிறுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

சுன்னாகம் மீன் சந்தையில் ஒழுங்குமுறையில் கழிவகற்றல் இடம்பெறுவதில்லை. பணியை ஒழுங்காகச் செய்யலாமே என்று கேட்டேன். அப்போது எனது கையில் மீன்வெட்டும் கத்தி இருந்தது. அதி காரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் ஒழுங்கான கழிவகற்றலை உறுதி செய்யவில்லை என்று பொலிஸா ரால் கைது செய்யப்பட்ட மீன் வியா பாரி தெரிவித்தார்.

(ஐ – 07)

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்குக் கொடுத்த விதம் தவறு

## இந்திய ஊடகத்துக்கு கோட்டா பரபரப்புப் பேட்டி

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் முழுக் கட்டுப்பாட்டை சீனாவுக்குக் கொடுத்தமை தவறென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்திய ஊடகவியலாளர் நிதின் கோகலேவுக்கு வழங்கிய செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்று இந்தியாவுக்கான விஜயத்திற்கு முன்னர் முதன்முதலில் இந்த பேட்டியை வழங்கியிருக்கும் ஜனாதிபதி , இந்தியாவுக்கு எதிரான எந்த வேலையையும் தமது நாடு செய்யாது என்பதனை குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.


அந்த செவ்வியின் சாராம்சம் –

நான் ஒரு நடுநிலைவாதியாக இருக்க விரும்புகிறேன் என்று நான் பதவி ஏற்றுக் கொண்ட உரையில் கூடக் குறிப்பிட்டுள்ளேன். அது சாத்தியம். உலகில் இதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன. இன்றைய புவிசார் அரசியலில் இந்தியப் பெருங்கடல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் அறிவோம். எனவே நாம் புவியியல் ரீதியாக மிகவும் மூலோபாய இடத்தில் அமைந்துள்ளோம். அனைத்துக் கடல் பாதைகளும் இலங்கைக்கு அருகில், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்கின்றன. இந்த கடல் பாதைகளின் முக்கியத்துவத்தை நீங்கள் அறிவீர்கள். குறிப்பாக, ஆசியா வளர்ந்து வரும்போது, அவற்றின் விளைபொருள்கள் உலகிற்கு செல்ல வேண்டும். நீங்கள் வளரும் அதே நேரத்தில், உங்களுக்கு ஆற்றல் தேவை. எரிசக்தி வளம் போன்றனா இன்னும் மத்திய கிழக்கில் உள்ளன. அது வர வேண்டும். தாதுக்கள் ஆப்பிரிக்காவில் உள்ளன, அந்த விடயங்கள் வர வேண்டும். இது மிகவும் முக்கியமானது. ஆனால் விடயம் என்னவென்றால், இந்தப் பாதைகள் முழு உலகுக்கும் இலவசமாக இருக்கவேண்டும். எந்த நாடும் கடல் பாதைகளைக் கட்டுப்படுத்தக்கூடாது. ஏனெனில் அது மிகவும் முக்கியமானது.

நான் நடுநிலை என்று கூறும்போது, நாங்கள் ஒரு நாட்டைக் கட்டுப்படுத்த விரும்பவில்லை அல்லது சம நிலைப்படுத்தும் செயலில் இறங்க விரும்பவில்லை. நாங்கள் அதை விரும்பவில்லை. அதனால்தான் நான் நடுநிலை என்று சொன்னேன். நாம் மிகச் சிறியவர்கள், இந்தச் சமநிலைப்படுத்தும் செயலில் இறங்கினால் எங்களால் வாழ முடியாது. வல்லரசுகள் அல்லது உலக வல்லரசுகளின் அதிகாரப் போராட்டங்களுக்கு இடையில் செல்ல நாங்கள் விரும்பவில்லை. எனவே, அடிப்படையில், நாங்கள் எல்லா நாடுகளுடனும் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். வேறு எந்த நாட்டிற்கும் தீங்கு விளைவிக்கும் எதையும் நாங்கள் செய்ய விரும்பவில்லை.

இந்திய அக்கறைகளின் முக்கியத்துவத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம். எங்களுக்குத் தெரிந்து இந்தியாவின் பாதுகாப்பை அச்சுறுத்தும் எந்தவொரு செயலிலும் நாங்கள் செயல்படவோ அல்லது ஈடுபடவோ முடியாது. நாங்கள் இந்தப் பிராந்தியத்தில் இருக்கிறோம். இந்தியா ஒரு பெரிய சக்தி, ஒரு பெரிய நாடு. நாங்கள் ஒரு சுதந்திரமான, இறையாண்மை கொண்ட தேசமாக இருக்க விரும்புகிறோம். ஆனால் நாங்கள் மற்றவர்களின் விடயங்களில் தலையிட விரும்பவில்லை. மற்ற நாடுகளின் கண்ணோட்டங்களை நாம் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும். ஆனால் (இன்று) எல்லோரும் விரும்புவது, மிக முக்கியமான விடயம், பொருளாதார வளர்ச்சி.

சீனாவுடனான எங்கள் ஈடுபாடு, கடந்த சில ஆண்டுகளில் குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ அரச காலத்தில், முற்றிலும் வணிக ரீதியானது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கட்டுப்பாட்டை நாங்கள் ஒருபோதும் சீனாவுக்குக் கொடுத்திருக்கக்கூடாது. அதிலொரு தவறு நடந்துள்ளது. 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. சீனா எங்களுடைய நல்ல நண்பராக இருந்தாலும், அபிவிருத்தி செய்ய எங்களுக்கு அவர்களின் உதவி தேவைப்பட்டாலும், அது ஒரு தவறு என்று சொல்ல நான் பயப்படவில்லை. எங்களுக்கு அதனை மறுபரிசீலனை செய்ய ஒரு சிறந்த (ஒப்பந்தத்துடன்) வருமாறு அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். இன்று அந்த ஒப்பந்தத்தில் எமது மக்கள் மகிழ்ச்சியடையவில்லை. ஒரு வருடம், இரண்டு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் என்று நாம் சிந்திக்கலாம். எதிர்காலத்தில் என நடக்கும் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். எனவே முதலீட்டுக்கு ஒரு சிறிய நிலத்தை கொடுப்பது வேறு விடயம். ஒரு ஹோட்டல் அல்லது வணிகச் சொத்தை உருவாக்குவது ஒரு பிரச்சினை அல்ல. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த, பொருளாதார ரீதியாக முக்கியமான துறைமுகம்..அதை அப்படி கொடுப்பது ஏற்கத்தக்கதல்ல. எங்களுக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். அது தொடர்பில் நாங்கள் மீண்டும் பேச்சு நடத்த வேண்டும். ஒரு செயல்பாட்டுக்கு ஒரு முனையம் கொடுப்பது வேறு விடயம், ஒரு ஹோட்டலைக் கட்டுவதற்கு சில இடங்களைக் கொடுப்பது வேறு. அது ஏற்கத்தக்கது அல்ல. எனவே அது எனது நிலைப்பாடு. நாங்கள் இந்தியாவுடன் மிக நெருக்கமாகப் பணியாற்ற விரும்புகிறோம்.



நாங்கள் சீனாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். இராஜதந்திர உறவுகள் மற்றும் பொருளாதார உறவுகள் எல்லா இடங்களிலும் உள்ளன. இந்தியா சீனாவுடன் நெருக்கமாக செயல்படுகிறது. இந்திய முதலீடு சீனாவுக்குச் செல்கிறது என்பது எனக்குத் தெரியும். சீன முதலீடு இந்தியாவுக்கு வருகிறது. அதைப் போலவே, நாங்கள் முதலீடுகளையும் உதவிகளையும் விரும்புகிறோம். அதேபோல இராணுவ மற்றும் புவிசார் அரசியல் போட்டிகளில் ஈடுபட நாங்கள் விரும்பவில்லை.

இந்தியா, சிங்கப்பூர், ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற உலக வல்லரசுகளுக்கு நான் சொல்ல விரும்பும் மற்றொரு விடயம், உங்களுக்குத் தெரியும், உண்மை என்னவென்றால், அவர்கள் சீன ஈடுபாட்டைப் பற்றிப் பயப்படுகிறார்கள். அது ஓர் உண்மை. ஆனால் எங்கள் பார்வையில் நாங்கள் அதனை வணிக ரீதியாகவே பார்க்கிறோம் .எங்கள் பார்வையில் இது வணிக ரீதியானது. நாங்கள் ஒரு சிறிய நாடு. நமது பொருளாதாரத்தை மேம்படுத்த அந்நிய முதலீடுகளை விரும்புகிறோம். எனவே இந்தியா, சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவை இங்கு வந்து முதலீடு செய்ய அழைக்கிறேன். சீனாவை மட்டுமே முதலீடு செய்ய அனுமதிக்காதீர்கள். அதை ஒரு நாட்டுக்கு விட்டுவிட்டு பின்னர் முணுமுணுக்காமல் இந்த அரசுகள் தங்கள் தனியார் நிறுவனங்களை வந்து முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும். வந்து எங்களுக்கு உதவ வேண்டும்.

எனவே நான் இதை வெளிப்படையாகச் சொல்கிறேன். ஏனென்றால் அவர்கள் வந்து இந்த நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நாங்கள் ஒரு சிறிய நாடு. தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். எங்களுக்கு அழுத்தம் கொடுப்பதை விட, எங்களைப் புரிந்துகொண்டு இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஈடுபடுங்கள். பல வழிகள் உள்ளன. நான் பணத்தை மட்டும் சொல்லவில்லை. எங்கள் தயாரிப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள் – எங்களிடம் தேநீர், கறுவா , மிளகு, தேங்காய் உள்ளன. நீங்கள் விவசாயத்திற்கு உதவலாம். கல்வி இருக்கிறது.உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் முதலீடு செய்யலாம்.நிறைய வழிகள் உள்ளன. நிச்சயமாக, நான் சிவப்பு நாடாவை வெட்ட விரும்புகிறேன். நாட்டின் முன்னேற்றத்திற்காக பழைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் உள்ள சிக்கல்களைக் குறைக்க விரும்புகிறேன். நான் முதலீட்டு நட்புச் சூழலை உருவாக்குவேன்.

**நட்பு நாடு இந்தியா**

இந்தியாவுடன் நட்பு நாடாக நாங்கள் பணியாற்றுவோம் என்று இந்திய அரசுக்கு உறுதியளிப்பேன். பாதுகாப்பு நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் எதையும் நாங்கள் செய்ய மாட்டோம். மேலும் பல துறைகளில் முதலீடுகளில் எங்களுக்கு உதவவும், கல்வியில் எங்களுக்கு உதவும்படியும் நான் கேட்டுக்கொள்கிறேன். அது மிகவும் முக்கியமானது. தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் உங்களுக்குத் தேவை. பிரதமர் மோடி கூட அவர் அண்டை வீட்டை அணுகும் முறையை மாற்றியுள்ளார் என்று நினைக்கிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக, தமிழ் அரசியல் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் மக்களை முட்டாளாக்க முயற்சித்து நடைமுறைச் சாத்தியமற்றதை மட்டும் பேசிக் கொண்டிருந்தார்கள். நாம் முதலில் என்ன செய்ய முடியும் என்பதில் நாம் கவனம் செலுத்தவேண்டும். உங்களுக்குத் தெரியும், இந்த நாட்டில் இலங்கையராக வாழ அனைவருக்கும் ஒரு நல்ல வாய்ப்பை வழங்கவும், கல்வி பெறவும், சிறந்த வாழ்க்கை வாழவும், நல்ல வேலையைப் பெறவும், கண்ணியமாக வாழவும் ஏற்ற சூழலை நான் உருவாக்குவேன். மற்ற அரசியல் விடயங்கள் தொடரட்டும்.

நீண்ட காலமாக, பள்ளிக்குச் செல்ல வாய்ப்பு இல்லாத குழந்தைகள் காடுகளில் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இப்போது அவர்களுக்குச் சில பயிற்சிகள் கொடுங்கள். இதனால் அவர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்த முடியும் . அவர்கள் சில வேலைகளில் இறங்கலாம். இந்த வேலை வாய்ப்புகளை உருவாக்குங்கள். இதுவே எனது கவனம். இந்த பகுதிகளை அபிவிருத்தி செய்தால் அவர்களுக்குச் சம வாய்ப்புகள் கிடைக்கும்.

நான் 20 ஆண்டுகள் இராணுவத்தில் இருந்தேன் என்பது உண்மை. நான் பயங்கரவாதத்திற்கு எதிராக ஓர் இராணுவ அதிகாரியாகப் போராடினேன். பின்னர் நான் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றேன். அமெரிக்காவில் கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் வாழ்வதற்காக வெளிநாடு சென்றேன். பின்னர் நான் மீண்டும் பாதுகாப்புச் செயலாளராக வந்தேன். ஆனால் மக்கள் என்னைச் செயலாளர் என்று மட்டுமே அங்கீகரித்தனர். அவர்கள் என்னை அறிவார்கள். பாதுகாப்புச் செயலாளராக இருந்தமையால் இந்த மனிதன் சர்வாதிகாரமாக இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நான் ஒழுக்கமான ஒரு நபர். நான் இனவெறி கொண்டவன் அல்லன் என்பதை எனது செயலில் நிரூபித்துள்ளேன். நான் சமூகத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே வேலை செய்ய மாட்டேன். அதனால்தான் நாட்டை வளர்ப்பதில் என்னுடன் இணையுமாறு தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மற்றும் அனைவரையும் அழைத்தேன்.

உங்களுக்குத் தெரியும், எதிர்க்கட்சி என்னை ஒரு சர்வாதிகாரியாகக் காட்ட முடியும். ஆனால் நான் அப்படி இல்லை. எனது செயல்களில் இனி அதனை மக்கள் பார்ப்பார்கள். அதே நேரத்தில், குறிப்பாக ஊடகங்கள் செவிப்புலன் அல்லது வதந்திகளைச் சொல்லக்கூடாது. தவறான விடயங்களைப் பிரசாரம் செய்ய வேண்டாம். என்னைப் புரிந்து கொள் ளுங்கள், என்னுடன் பேசுங்கள். என்னைச் சந்தித்து நான் எப்படி இருக்கிறேன், நான் எவ்வாறு வேலை செய் கிறேன் என்று சரியான படத்தைக் கொடுங்கள். இது ஒரு சிறிய நாடு, வளரும் நாடு. என் வழியில் தடைகளை வைக்கக்கூடாது. இறுதியில் அது யாருக்கும் உதவாது.

என்னை விமர்சிப்பதை விட, இந்த விடயங்களை மறக்குமாறு தமிழ் புலம்பெயர்ந்தோரைக் கூட நான் கேட்டுக்கொள்கிறேன்.இதனால் யாருக்கும் பயனில்லை. மாறாக, நம் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.இலங்கையில் பிறந்தால் எல்லோரும் இலங்கை குடிமகன்களே. அவர்களுக்கு எல்லோருக்கும் சம உரிமை உண்டு, ஆனால் அவர்கள் சில விடயங்களைச் செய்யக்கூடாது. அவர்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.
– என்றார் கோட்டாபய. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2019 இல் வெளியிடப்பெற்றது.